விலை: 30.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + II + II

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-9651)

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 19 திங்கட்கிழமை (01.06.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 165

## முழுமையாக ஊரடங்கை நீக்க அரசாங்கம் முடிவு

### பசில் ராஜபக்ஷ

(கொழும்பு)

பொசன் போயா தினத்திற்கு பின் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவை தொடர்பான ஜனாதிபதி செய 15

## 1633 ஆக கொரோனா அதிகரிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றிற்குள்ளானவர்களின் எண்ணிக்கை 1,633ஆக உயர்ந்துள்ளது.

நேற்று 20 பேர் 15

## தாக்குதல் நடத்த போடப்பட்ட திட்டம் இராணுவத்தால் முறியடிப்பு

(அராலி)

வன்முறைக் கும்பல் ஒன்றினால் தாக்குதல் நடத்த போடப்பட்ட திட்டம் ஒன்று இராணுவத்தால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் மல்லாகம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வன்முறைக் கும்பல் ஒன்று மல்லாகத்தில் உள்ள சுடலை ஒன்றில் ஒன்றுகூடி தாக்குதல் ஒன்றினை நடத்து 15

## 18 வயது இளைஞன் வவுனியாவில் சடலமாக மீட்பு


(வவுனியா)

வவுனியா ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கருவேப்பங்குளம் பகுதியில் இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு குறித்த இளைஞனை நீண்ட நேரம் காணாத 15

# தம்மைத் தாமே ஆளும் தீர்வே தமிழரின் கோரிக்கை

## பிரதமர் மகிந்தவின் கருத்துக்கு நீதியரசர் விக்னேஸ்வரன் பதில்



(யாழ்ப்பாணம்)

வட கிழக்குத் தமிழ் பேசும் மக்கள், தாம் ஒரு தேசம் என்ற முறையில் தம்மைத் தாமே ஆளும் உரிமை படைக்க வேண்டும் என்பதையே நாடுகின்றார்கள். அது அவர்கள் பிறப்புரிமை.

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

தரம் 5
புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த (சா/த) சைவ நெறி
வினாத்தாள்கள் உள்ளே

## முல்லையில் தனிமைப்படுத்தப்பட்ட இருவருக்கு கொரோனா

### 4 நாட்களில் 7 பேருக்கு தொற்று உறுதி

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை 45 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர்களில் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த இருவருக்கு கொரோ 15

### ஊரடங்கு அமுலில் இருந்த வேளை

## தென்மராட்சியில் இளம் பெண்ணை வெள்ளைவானில் கடத்த முயற்சி

(கொடிகாமம்)

தென்மராட்சி மந்துவில் பகுதியில் உள்ள வீடொன்றினுள் ஊரடங்கு நேரத்தில் புகுந்த வெள்ளை வான் கும்பல் ஒன்று இளம் பெண் ஒருவரைக் கடத்திச் சென்று சுமார் ஒரு மணி நேரத்திற்கு பின்னர் விடுவித்துள்ளனர்.

மந்துவில் வடக்கு 15

## ஆறுமுகனின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமமானது

### பிரதமர் மகிந்த உள்ளிட்ட அரசியல்வாதிகள், பொதுமக்கள் இறுதி அஞ்சலி

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் மறைந்த ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடல் நேற்று மாலை அக்கினியுடன் சங்கமமாகியது.

நோர்வூட் சௌமியமூர்த்தி தொண்டமான் விளையாட்டரங்கில் முழு 15





## மணல் ஏற்றிச் செல்ல இன்று முதல் அனுமதி

(கொழும்பு)

மணல் மண் ஏற்றிச் செல்வதற்கான அனுமதி இன்று முதலாம் திகதி முதல் வழங்கப்படுமென சுரங்கப் பணியகத்திணைகளம் தெரிவித்துள்ளது.

மணல் மண் ஏற்றிச் செல்வதற்கான அனுமதி கடந்த சில மாதங்களாக இடை நிறுத்தி வைக்கப்பட் டிருந் 15

## தேர்தல் பிரசாரத்துக்கான நடைமுறைகளை பரிந்துரைக்குக

### தேர்தல்கள் ஆணைக்குழு புத்திஜீவிகளிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

கொரோனா அபாயம் காரணமாக எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான பிரசாரப் பணிகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான நடைமுறைகளை 15


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

உ
சிவார்ப்பணம்

அன்னை எனும் ஆலயத்தில் ஆண்டவனாய் அமைந்து

2020ல் 5ம் ஆண்டு

# நினைவுதனில்



அன்னை மடியில் 25 - 02 - 1950

ஆண்டவன் அடியில் 26 - 05 - 2015

## அமரர் நாகலிங்கம் தெட்சணாமூர்த்தி

(ஜெகதா ஹாட்வெயர்ஸ், ஸ்தாபகரும் உரிமையாளரும்
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்)

திதி – வைகாசி பூர்வபக்க நவமி (31.05.2020)

- நகரா முழங்கிடவே நபோமணி ஆனவரே!
  நந்திகேஸ்வரரை நயந்து போய் அடைந்தீரே!
- நாசி கேது சாட்சியாக நயந்து மணந்த நாச்சியாரை!
  நாட்பொருத்தம் பார்த்து நாடித்தான் சென்றீரோ!
- நிதிக்கிழவன் தேரேறி நிச்சிரேயசம் பெற்றவரே!
  நிர்க்கதியாய் நிற்கின்றோம் நின் தயவு இல்லாமல்!
- நீதி வழுவா நெறிமுறையில் நியதி பூண்டு நின்றவரே!
  நீர்க்கடன் தான் செய்கின்றோம் நீர் நிறைந்த விழிகளுடன்!
- நுண்ணுணர்வு பெற்றவரே நுட்பங்கள் அறிந்தவரே!
  நுதற் கண்ணன் பாதமதில் நித்திய மலர் ஆனீரோ!
- நூனயம் பெற்றுயர்ந்து நெறிமுறையாய் வாழ்ந்தவரே!
  நூங்கர் உலகம்தான் உவப்பாய் அடைந்தீரோ!
- நெகிழம் அணிந்த ஜெகதா அம்மை தோள்சேர!
  நெஞ்சம் உவந்து நெடுந்தொலைவு சென்றீரோ!
- நேத்திரங்கள் நோகுதையா! நெஞ்சங்கள் தவிக்குதையா!
  நேத்திர வீட்சணம் செய்வீரோ! நேசமிகு எம் அம்மையுடன்! (2929)
- நைமித்திகம் தனை நவாலியூர் கணபதிக்கு! நித்தமும் செய்தீரே!
  நைவேதனம் செய்வதற்கு உம்மையே சமர்ப்பித்தீரோ!
- நொடி பயிற்றுவித்து நடை பயிற்றுவித்து நயமாய் வளர்த்தீரே!
  நொவ்விதாக எமைவிட்டு சொர்க்க வாசல்தான் ஏகினீரோ!
- நோற்பிருந்து வணங்குகின்றோம் தயை நோக்குதல் செய்வீரே!
  நோன்புக்கிரியை நோற்கின்றோம் அருளாசி வழங்குமையா!
- நௌவி போன்ற உம் மனையுடன் கனிந்து மகிழ்ந்து வாழ்ந்தீரே!
  நௌ விலேறி கங்காதீரம் கடந்து சிவனருள் பெற விரைந்தீரோ!
- அஃது நிச்சயம் கிடைத்திருக்கும் உங்களது ஆருயிர்க்கு!
  நயநந்திரன் தான் உம் அன்பு நேசன் ஆயிற்றே!

ஐயனே! கொடி வழி பெருகும் போது தங்கள் நல் அறங்களும்
தொடரும் என அக்கினிப் பிளம்பெனக் கொதித்து வழியும் விழிநீரை
சாட்சியாக்கி வாக்களிக்கின்றோம்.

ஈர விழிகளுடன்:– குடும்பத்தினர்
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

# எரிக்கப்பட்ட நூலகத்தின் வெம்மைத்தணல் இன்றும் தமிழரை வாட்டிக்கொண்டிருக்கிறது

## 39 ஆண்டுகள் கடந்தும் கொழுந்து விட்டெரியும் நினைவுகள்



தென்கிழக்காசியாவின் அறிவுக் களஞ்சியமாகப் போற்றப்பட்ட யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டு இன்றுடன் 39 ஆண்டுகள் கடந்தாலும் தமிழ் மக்கள் மத்தியில் அத்துயரச் சம்பவம் ஏற்படுத்திய வடு இந்தக் கணம் வரை மாறாதுள்ளது.

ஜே.ஆர். ஜெயவர்த்தன வின் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் திட்டமிட்டு நடத்தப்பட்ட இச்சம்பவமானது தமிழ் மக்களின் அடையாளம், அறிவு மற்றும் பண்பாடு போன்றவற்றை இல்லாதொழிக்கும் தமிழ் இன அழிப்பின் ஒரு அடையாளமாகவே தமிழ் மக்கள் இன்றும் பார்க்கிறார்கள்.

இந்நூலக அழிப்பின் போது பல நூற்றாண்டு பழைமை வாய்ந்த 97 ஆயிரம் அரியவகை தமிழ், ஆங்கில நூல்களும் மற்றும் ஓலைச் சுவடிகளும் அழிந்து போயுள்ளன.

தென்கிழக்காசியாவின் மிகப் பெரிய அறிவியல் பொக்கிஷமாகப் போற்றப்பட்ட யாழ்ப்பாணப் பொதுநூலகத்தின் அழிப்பு என்பது மனித நாகரிகத்தின் மோசமான துயரம். 1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி நள்ளிரவில் இந்தக் கொடுமை நேர்ந்தபோது அதனை யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியின் மாடியிலிருந்து நேரில் பார்த்த தாவீது அடிகளார் அந்தக் கணத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தி ஒன்றே அந்த நூலகத்தின் பெறுமதியை எடுத்துக் காட்டுகின்றது.

எமது பொக்கிஷத்தை அழித்துவிட்டு வெறுமனே கட்டடத்திற்கு வெள்ளை பூசுவதென்பது அழிந்தவற்றை மீளப் பெற்றுத் தராது. (ஜ-2)

# தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து 11 ஆயிரத்து 56 பேர் வெளியேற்றம்

(கொழும்பு)

நாடு முழுவதும் முப்படையினரால் நிர்வகிக்கப்பட்டுவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து 11 ஆயிரத்து 56 பேர் வரையில் வெளியேறியுள்ளதாக கொவிட்-19 பரவல் தடுப்பு தேசிய பயன்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் முப்படையினரால் நிர்வகிக்கப்பட்டுவரும் 44 தனிமைப்படுத்தும் நிலையங்களில் 5 ஆயிரத்து 154 பேர் தனிமைப்படுத்தலில் உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் நிலையங்களான பனிச்சங்கேணியில் 7 பேர் மற்றும் ராஜகிரிய ஆயுர்வேத வைத்தியசாலையிலிருந்து 8 பேர் என மொத்தம் 15 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் பின்னர் கடந்த 29 ஆம் திகதி வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்நிலையிலேயே, கடந்த 29 ஆம் திகதி வரை 11 ஆயிரத்து 56 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டு வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என கொவிட்-19 பரவல் தடுப்பு தேசிய பயன்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. (ஜ-8)

# எரிந்த காடு வனமல்ல; மக்கள் விவசாய நிலம்

## அதை மக்களுக்கு பெற்றுக் கொடுப்போம் என்கின்றனர் சாள்ஸ், ரவிகரன்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட எல்லைக் கிராமங்களான எரிஞ்சகாடு, சகலாத்துவெளி கிராமங்களில் தமிழ் மக்களின் பூர்வீகமான 490 ஏக்கர் விவசாய நிலத்தை புனர்நிர்மாணம் செய்ய வனவளத் திணைக்களம் உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்கள் தடைபோடுவதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் குறித்த இடத்தை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களான சி.சிவலிங்கம், சி.லோகேஸ்வரன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

சூரியன் ஆற்றுக்கு மேல் பக்கமாக உள்ள குறித்த எரிந்த காடு சகலாத்துவெளி கிராமங்களில் தமிழ் மக்களின் பூர்வீகமான 490 ஏக்கர் விவசாய நிலங்களில் கொக்குத்தொடுவாய் பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்கள், இடம்பெயர்வதற்கு முன்னர் பூர்வீகமாக விவசாயம் செய்துவந்ததோடு, மீள்குடியேற்றப்பட்ட காலப்பகுதியிலிருந்தும் தொடர்ச்சியாக மானாவாரி நெற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது குறித்த எரிந்த காடு விவசாய நிலங்களில் வயல் காணிகளில் உள்ள பற்றைகளை துப்புரவு செய்து வரம்புகளை கட்டி பயிர்ச்செய்கைக்கான ஆயத்தங்களை செய்வதற்காக, கனரக இயந்திரங்களை கொண்டு சென்ற மக்களை வனவளத் திணைக்களம் உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்கள் தடைபோடுவதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து சாள்ஸ் நிர்மலநாதன், ரவிகரன் ஆகியோர் நேரில் பார்வையிடச் சென்றனர்.

அவ்விடத்துக்கு வருகை தந்த வனவளத் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடி குறித்த பகுதி வனம் இல்லை என்பதால் உரிய திணைக்களங்களின் அனுமதிகளுடன் காணிகளை துப்புரவு செய்ய ஏற்பாடு செய்வதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

இதற்கமைய இன்று பிரதேச செயலகம் மற்றும் கமநல சேவை நிலையம் என்பவற்றின் ஊடாக குறித்த காணிகளை புனர்நிர்மாணம் செய்ய ஏற்பாடு செய்து தருவதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மேலும் தெரிவித்தார்.

குறித்த மக்களது காணிகளில் இவர்களது விவசாய நடவடிக்கைக்கு தடை விதித்து மக்களை பட்டினிச்சாவுக்குள் தள்ளவேண்டாம் என முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார். (ஜ-2-5-281)

# குணமடைந்தோர் 801

(கொழும்பு)

நாட்டில் நேற்றைய தினம் மேலும் 20 கொரோனா தொற்றாளர்கள் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி நாட்டில் இதுவரை குணமடைந்தோரின் எண்ணிக்கை 801 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட 15 கடற்படையினர் குணமடைந்துள்ளதாக கடற்படை ஊடகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இதுவரை உறுதிப்படுத்தப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 1,620 ஆகும்.

இந்நிலையில், கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள 801 பேர் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர். 97 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு, கொரோனா தொற்றுக்கு இலக்காகி இலங்கையில் 10 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# மீண்டும் இணைந்தால் மன்னிப்பு உண்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் மீண்டும் கட்சியுடன் இணைந்து செயற்பட முன்வருவார்களானால் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கி இணைத்துக்கொள்ளப்படுவார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், தொகுதி அமைப்பாளர்கள் உள்ளிட்ட 99 உறுப்பினர்களின் உறுப்புரிமையை கட்சியின் மத்திய செயற்குழு நீக்கியுள்ளது.

மனம் மாறி வருபவர்களுக்காக ஐ.தே.கவின் கதவுகள் திறக்கப்பட்டே உள்ளன.

அவ்வாறு வருவோர்களின் கோரிக்கையை கட்சியின் மத்திய செயற்குழு பரிசீலிக்கத் தயாராக இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# ஊரடங்கை மீறிய 86 பேர் கைது

(கொழும்பு)

ஊரடங்குச் சட்டத்தை மீறிய 86 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் இரவு 10 மணி முதல் நேற்று அதிகாலை 4 மணி வரையான காலப்பகுதியில் 16 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் நேற்று அதிகாலை 4 மணி வரையான காலப் பகுதிக்குள் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 66 ஆயிரத்து 921 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் 18 ஆயிரத்து 847 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் 23 ஆயிரத்து 636 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஜ-8)

# புகைத்தல் பாவனையை தடுப்பது தொடர்பான வேலைத்திட்டம் நடைமுறையில் -பவித்திரா



(கொழும்பு)

புகைத்தல் பாவனையைத் தடுப்பதை இலக்காகக் கொண்டு வேலைத்திட்டம் நடை முறைப் படுத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னி யாராச்சி தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

மக்களின் சுகாதார நிலையைப்பாதுகாப்பதே முதற் கட்ட நோக்கமாகும்.

புகைத்தலை மேற்கொள்ளும் நபர்கள் கொடிய கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்படும் அபாயம் காணப்படுகின்றது.

சிகரெட்மற்றும்புகையிலைப் பாவனையை இலங்கையில் இல்லாதொழிக்க வேண்டும்.

இதற்கு ஜனாதிபதியின் ஆலோசனையின் கீழ் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதிகளவான புகைத்தல் பாவனையைக் கொண்ட நாடுகளில் கொவிட் -19 தொற்று வேகமாக அதிகரித்துள்ளது.

புகைத்தலினால் நுரையீரல் பாதிக்கப்பட்டவர்கள் வைரஸ் தொற்றுக்கு இலக்காகுகின்றனர்.

சிகரெட் பாவனை காரணமாக பொருளாதாரம் பாதிப்பை எதிர்கொள்ளக் கூடும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# தமிழீழ சைபர் படையணியால் அரச இணையத்தளங்களில் தரவுகள் திருடப்படவில்லை

## பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தின் இரண்டு பிரதான இணையத்தளங்கள் மீது சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் எவ்வித தரவுகளும் திருடப்படவில்லை என இலங்கை கணனி அவசர நடவடிக்கை பிரிவு உறுதிப் படுத்தியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சு தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பொதுநிர்வாக அமைச்சின் இணையத்தளம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆகியவற்றின் இணையத்தளங்கள் மீது, "தமிழீழ சைபர் படையணி" என்ற பெயரிலான குழுவினால் இந்த சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக வான் படையின் தொழில்நுட்ப பிரிவு சுட்டிக்காட்டியிருந்தது.

இணையத்தள செயலிழப்பானது, தாக்குதல் நடத்தப்படுபவரினால் இணையத்தளத்தின் தோற்றத்தினை மாற்றுவதன் மூலம் நிகழ்த்தப்படுவதாகவும் எவ்வாறாயினும் இந்த முயற்சியின் மூலம் தரவுகள் திருடப்படவில்லை என இலங்கை கணனி அவசர நடவடிக்கை பிரிவு உறுதிப்படுத்தியதாக மேலும் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சைபர் தாக்குதலானது, காலை 6.38 மணிக்கு கண்டறியப்பட்டதுடன், காலை 7.30 மணியளவில் இணையத்தளங்கள் மீண்டும் வழமைக்குக்கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஜ-8)

# 26 ஆசிரியர்கள் தனிமைப்படுத்தல்

(கொழும்பு)

பிலியந்தல - கொத்தலாவல பாடசாலையைச் சேர்ந்த 26 ஆசிரியர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

குறித்த பாடசாலையில் கடற்படைச் சிப்பாய்கள் தங்கியிருந்தமையாலேயே ஆசிரியர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

கொத்தலாவல பாடசாலையில் தங்கியிருந்த 6 சிப்பாய்களுக்கு கொரோனா வைரஸ் உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை மேல் மாகாணத்தில் 200க்கும் அதிகமான பாடசாலைகளில் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள் தங்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# தேர்தலுக்கான பிரசாரப் பணிகளை மேற்கொள்ள தேவையான பரிந்துரைகளை வழங்கக் கோரிக்கை

(கொழும்பு)

கொரோனா அபாயம் காரணமாக எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான பிரசாரப் பணிகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான நடைமுறைகளைப் பரிந்துரைக்குமாறு தேர் தல்கள் ஆணைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

இம்முறை தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகள், புத்தி ஜீவிகள் மற்றும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஆகியோரிடம் ஆணைக்குழு குறித்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பரிந்துரைகளை மீளாய்வு செய்து பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்.

பிரசாரப் பணிகள் தொடர்பான பரிந்துரைகள் தொடர்ந்தும் கிடைப்பதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


எதிர்வரும் பொதுத் தேர்தலை சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கமைய நடத்துவது தொடர்பில், கட்சி உறுப்பினர்கள் மற்றும் உரிய பிரிவுகளுடன் கலந்துரையாடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டது. (ஜ-8)

# யுத்தம் தந்த கருக்கோள வடு

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக யுத்தம் எமது பிரதேசத்தில் வாழ்ந்த தாய்க்குலத்தினரில் கருக்கோளக வடுவினைப் பதியவைத்துள்ளது. இது தொடர்பான பெண் நோயியல் சிறப்பு மருத்துவ ஆய்வும் பெண் நோயியல் சிகிச்சைக்கான பிரத்தியேக மருத்துவ விடுதி வசதிகளும் இன்றியமையாதவை ஆகின்றது. தாய்மைக்குரிய கருப்பம் தங்கும் கருப்பையினை தொன்மையான தமிழில் கருக்கோளம் என்பர். இக்கருக்கோளம் (Uterine) குருதியில் உள்ள கானில் சுரப்புக்களின் (Hormones) செறிவினால் மாற்ற மடையக் கூடியது.

ஒரு பெண் பூப்படைவதில் இருந்து கருக்கோளகத்தில் கானில் சுரப்புக்களின் தாக்கம் சந்திர மாதத்துடனாக மாறி மாறி வரும். நிலா தேய்வது போலும் வளர்வது போலும் கருக்கோளகத்தில் மாற்றங்கள் நிகழும். ஒரு பெண்ணை நிலவுக்கு ஒப்பிடுவதற்கு உடற்றொழிலியல் மாற்றமும் பூமி மாதாவின் மாற்றமும் பொருந்தும் உவமானநிலை இங்கு நோக்கத்தக்கது.

ஆயினும் அசாதாரண சூழல் மாற்றங்கள் இயற்கைக்கு மாறாக உடலில் தாக்கத்தை ஏற்படுத்தும். மனிதனின் இயல்புக்கு ஒவ்வாத மனிதாபிமானமற்ற செயல்களே அசாதாரண சூழல் மாற்றங்களாகும். கோர யுத்தமும் அவ்வாறாக அசாதாரண மனித நேயமற்ற சூழல் மாற்றமாகும். அவற்றின் தாக்கங்கள் பெண்களின் கருக்கோளகத்தில் கணத்திற்கு கணம் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. யுத்தம் எனும் அசாதாரண சூழல் கருக்கோளகத்தில் ஏற்படுத்திய நீண்ட நாள் வடுக்களை நாம் தற்போது அவ தானிக்கக்கூடியதாக உள்ளது. இவற்றை நாம் சிறப்பான முறையில் எதிர்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சிறப்பாக சிகிச்சை அளிக்க வேண்டும். குறிப்பாக



தற்போது 50 வயதிற்கு மேற்பட்டவர்களில் இத்தாக்கத்தின் தன்மைகளை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. தாய்மை அடையாமை முதல் அசாதாரண குருதிப்பெருக்கம் வரை இதன் அறிகுறிகள் உள்ளன. பெண்களின் பெண் நோயில் தன்மைகளை உற்று நோக்குமிடத்து அவர் களில் கடந்த 30 வருட காலத்தில் ஏற்பட்ட சமூகச்சூழல் பொருளியல் மாற்றங்களின் தாக்கங்கள் பாதித்துள் ளதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

குறிப்பாக போசாக்கு இன்மை, இரும்புச்சத்து குறைபாடு, கருத்தடை மருந்துகளின் பாவனை, வலிநீக்கி மருந்துகளின் கட்டுப்பாடற்ற பாவனை (NSAID) அவர்களின் பொதுவான ஆரோக்கியத்துடன் கருக்கோளகத்திலும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. உடலில் கானில் சுரப்புகளின் அளவும் மாதவிடாய்ச்சக்கர மாற்றங்களும் யுத்த நெருக்கீடுகளால் அசாதாரண நிலைக்கு மாற்றப்பட்ட தன்மை உள்ளது. இவை கருக்கோளக வடுக்களாக தற்போது அமைந்து உள்ளன.

கருக்கோளகத்தின் அசாதாரண தன்மைகளை மீஒலி காண்பிகளால் (Ultrasound scanning) கண்டறிந்து சிகிச்சை செய்யக்கூடிய வசதிகள் தற்போது உள்ளது. கருக்கோளகத் தசைகளில் கானில் சுரப்பு களின் அசாதாரண தூண்டல்களால் பல தசைக்கட்டிகள் உருவாகும் சந்தர்ப்பம் உள்ளது. இவை சாதாரண தசைக்கட்டிகளாகவோ புற்றுநோய்க் கட்டிகளாகவோ அமையலாம். அடுத்து கருக்கோளாக அகவணியிலும் அசாதாரண இளைய வளர்ச்சிகள் உருவாகக்கூடிய சூழல் உள்ளது.

இவை சாதாரண சூழலில் வாழ்ந்த பெண்களைவிட சற்று வேறுபட்டுக் காணப்படும். இவை தொடர்பாக பெண்நோயியல் மருத்துவ ஆராய்ச்சி மிகவும் முக்கியமானது. கருக்கோளக புற்றுநோய்களின் ஏதுநிலைக்கும் காரணமாக அமைந்தும் இருக்கலாம்.

பெண்களில் ஏற்படும் நோய் நிலையான தீட்டுப் போதல் குருதிப் பெருக்குகளுக்கு சிகிச்சை அளிக்கும் போது உடனடி அவலத்தை மட்டும் நிவர்த்தி செய்யாது அது தொடர்பான முற்காப்பு நடவடிக்கைகளிலும் நாம் முன் முயற்சி செய்தல் வேண்டும்.

நவீன மருத்துவ வசதிகள் குறிப்பாக காந்தப்பரிவதிர்வு காண்பிகள் (MRI), கருக்கோளக அகக் காண்பிகள் (Endoscopy) என்பன பெண் நோயியல் நோய் நிலைகளைக் கண்டறிய உதவும். கருக்கோளத்தில் அபரிமித குருதிப்பெருக்கு நிகழும்போது குருதிக் குழாய்களில் குருதியை நேரடியாக உறைய வைப்பதன் மூலம் கட்டுப்படுத்தல் என்பனவற்றை மேற்கொள்ளலாம். இவ்வாறு நவீன மருத்துவ வசதிகள் உடைய பெண்நோயியல் மருத்துவ விடுதி அமைத்தல் எம் மன்னையர்களுக்கு நாம் வழங்கும் சுகநலன்களை வலுவூட்டும்.

காரணம் அறியாது காரிருளிலேயே காவு கொள்ளப்படும் காரிகைகள் வாழ்வு தவிர்க்கப்பட, நுண்மாண்புல அணுகுமுறை போர்வடுமிக்க சமூகத்தில் பெண்நோயியலில் தேவை ஆகும்.

மருத்துவர்.
சி.யமுனாநந்தா

# ஓராண்டு நினைவஞ்சலி

தாய் மடியில் 17 . 10 . 1917



இறை அடியில் 01 . 06 . 2019

## அமரர். கந்தையா கிருஷ்ணன்

சிவபதம் அடைந்த ஓய்வு நிலை, சிறப்பு நிலை தபால் அதிபர் கொடை வள்ளல் கந்தையா கிருஷ்ணன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கற்கரை கற்பக விநாயகனை பிறார்த்திக்கின்றோம்.

குப்பிழான் மக்கள் சார்பில்
தி.ரவீந்திரநாதன் J.P,
அதிபர்
(நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம்)

(C-9646)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர். திருமதி இராஜலட்சுமி குமரவேள்



எமது கல்லூரியின் சங்கீத ஆசிரியரும்
பகுதித் தலைவருமான (உயர்தரம்)
திருமதி உருத்திரசிங்கம் தேவமனோகரி
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி இராஜலட்சுமி குமரவேள் அவர்கள்
30.05.2020 அன்று இறைபதமடைந்ததையிட்டு
அவரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(2926)

ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.


## பெண் உதவியாளர் தேவை

Cargills Square இல் (No:11 1st Floor, Jaffna) அமைந்துள்ள Secrets விற்பனை நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை.

தகைமை:- A/L OR O/L ஆங்கில அறிவு, வேலை முன்னனுபவம் விரும்பத்தக்கது.

வேலை நேரம்:- 10.00 am to 7.30 pm Monday - Saturday

தொடர்புகளுக்கு:-
Priya.G
077 951 0436, 021 221 6488

(2906)


## ஹோட்டல்களில் திருமணத்திற்கு இன்று முதல் அனுமதி

(கொழும்பு)

நாட்டில் இன்று முதல் ஹோட்டல்களில் திருமணம் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படுவதாக சுற்றுலா மற்றும் விமான போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது

மூன்றில் ஒரு பகுதியினரே திருமண நிகழ்வில் கலந்து கொள்வதற்கு ஹோட்டல்கள் அனுமதிப்பதாகவும் திருமண நிகழ்வில் கலந்து கொள்பவர்கள் 1.5 மீற்றர் சமூக இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அமைச்சின் செயலாளர் சிறிபால ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நாட்டில் சுற்றுலாத்துறை மீள் ஆரம்பிப்பதற்காக சுகாதார அதிகாரிகள் பல்வேறு சுகாதார ஆலோசனைகளை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## இலங்கையிலும் வெட்டுக்கிளித் தாக்கம்!

(கொழும்பு)

வெட்டுக்கிளிகளின் தாக்கம் இலங்கையிலும் அவதானிக்கப் பட்டுள்ளது.

குருநாகல் மாவத்தக பகுதியில் நேற்று முன்தினம் வெட்டுக்கிளிகளின் தாக்கம் அவதானிக்கப் பட்டுள்ளது. அந்தப்பகுதிகளிலுள்ள விவசாய நிலங்களில் வெட்டுக்கிளிகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுவதாகவும் கிருமிநாசினி மூலம் வெட்டுக்கிளிகளை அழிக்க நடவடிக்கையெடுக்கப்படுவதாகவும் விவசாய சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

## 714 பேர் கைது

(கொழும்பு)

நேற்று முன்தினம் மாலை 6 மணி தொடக்கம் நேற்று அதிகாலை 5 மணி வரையான காலப் பகுதியில் பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 714 பேர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த காலப்பகுதியில் மேல் மாகாணத்தின் பல பகுதிகளில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். இதன்போது கஞ்சா, ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருட்களும் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-8)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 04.05.2020 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர்.பொன்.குணரத்தினம்

(ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 01.06.2020 இன்று திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 03.06.2020 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் சுகாதாரத்துறையினரின் அறிவுறுத்தலைப் பின்பற்றி கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு ஆறுதல் அளித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (2912)

கோ/ கிறிஸ்தவக் கல்லூரியடி,
பருத்தித்துறைவீதி, கோப்பாய்.

குடும்பத்தினர்


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# இராசிபலன்

01.06.2020
வைகாசி 19, திங்கட்கிழமை
தசமி பிற்பகல் 12.28 மணிவரை
அத்தம் முன்னிரவு 11.05 மணிவரை
சுபநேரம் 11.52-1.22 மணிவரை
இராகுகாலம் 7.22-8.52 மணிவரை
சந்திராஷ்டமம்:- சதயம், பூரட்டாதி
பாபஹரதசமி

வளவன்



**மேஷம்** — அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், உற்சாகத்தோடு பணி புரியும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.



**ரிஷபம்** — சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.



**மிதுனம்** — நண்பர்கள் மத்தியில் நல்லபெயர் கிடைக்கும், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகள் இடம்பெறும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.



**கடகம்** — பெரிய மனிதர்களின் நன்மதிப்பைப் பெறுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, உறவினர்கள் உங்களின் நலனில் அக்கறை காட்டுவர்.



**சிம்மம்** — பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், நல்லவர்களின் தொடர்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும், கௌரவமான நாள்.



**கன்னி** — ஆரோக்கியத்தில் அக்கறை கூடும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், போசன சுகமுண்டு.



**துலாம்** — குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, ஒருவேலையை முடிக்க இருமுறை அலைய நேரிடலாம், சயனசுகக் குறைவான நாள்.



**விருச்சிகம்** — தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சிதரும், குடும்பத்தில் மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.



**தனுசு** — மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.



**மகரம்** — நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பம் ஏற்படலாம், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், தேக நலனில் தெளிவு பிறக்கும், புதிய முயற்சிகள் கைகூடும்.



**கும்பம்** — இறைவழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், நண்பர்களின் மனம் கோணாது நடந்துகொள்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.



**மீனம்** — தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், விருந்துகளின் கலந்துமகிழும் வாய்ப்புண்டு, நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கனவு பலிதமுண்டு.

பணம் இல்லை, பயமும் இல்லை.

# யாழில் டெங்கு அபாயம்

## எச்சரிக்கிறார் பொது வைத்திய நிபுணர் பேரானந்தராஜா

(யாழ்ப்பாணம்)

**"யாழ்ப்பாணத்தில் இவ்வருடம் இதுவரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்து 195 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே மக்கள் தமது சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்காவிட்டால் டெங்கு நோயிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியாது" என யாழ்.போதனா வைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் தம்பிப்பிள்ளை பேரானந்தராஜா எச்சரித்துள்ளார்.**

தற்போதைய டெங்கு நோய்த் தாக்கம் தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே வைத்திய நிபுணர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படுகின்றது. எனவே டெங்கு நோயிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான முயற்சியில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர். யாழ். மாவட்டச் செயலாளர், அடுத்த வாரத்தை டெங்கு விழிப்புணர்வு வாரமாக அறிவித்துள்ளார்.

டெங்கு நோய் கடந்த 20 வருடமாக நாட்டின் பல பகுதிகளையும் தாக்கி வரும் நோய் குறிப்பாக 15 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு சிறுவர்களையும் இந்த நோய் அதிக பாதிப்பை ஏற்படுத்தும்.

இந்த நோயினால் கடந்த



வருடம் நாட்டில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் எட்டாயிரம் பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு இருந்தார்கள்.

அவர்களுக்குரிய சிகிச்சைகள் உரிய முறையில் வழங்கப்பட்டது. எனினும் இந்த வருடம் மே மாதம் வரை 2 ஆயிரத்து 195 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் ஏனைய வைத்தியசாலைகளிலும் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது. ஏனெனில் அந்தக் காலப்பகுதியில் மழைவீழ்ச்சி அதிகம் காணப்பட்டமையினால் குறித்த தாக்கம் அதிகரித்து காணப்பட்டது.

அதேபோல் கடந்த மாதம் பெய்த மழையின் காரணமாக மீண்டும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கூடுதலாக சங்கானை, உரும்பிராய், நீர்வேலி மற்றும் சுண்டுக்குளி போன்ற இடங்களில் இருந்து நோயாளர்கள் அதிகமாக வருவதை நாங்கள் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

இந்த நுளம்புகள் குறிப்பாக மாலை வேளைகளில்தான் அதிகமாக மக்களை தேடிச் சென்று கடிக்கின்றது. எனவே மக்கள் வீடுகளில் இருக்கும் போது மாலை நேரங்களில் தமது அறையின் கதவுகளை மூடிவிட்டு இருப்பது மிகவும் சிறந்தது. இல்லாவிட்டால் கொல்லி மருந்துகள் மற்றும் நுளம்புத்திரி போன்றவற்றினைக் கொளுத்தி வீடுகளில் வைப்பதன் மூலம் டெங்கு நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)




# யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவுக்கு மதிப்பீட்டுக்குழு பிரதிநிதிகள்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக வெற்றிடமாகக் காணப்படும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கான மதிப்பீட்டுக் குழுவுக்கான யாழ்ப்பாண பல்கலைக்கழக மூதவை பிரதிநிதிகள், பேரவையினால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற யாழ்.பல்கலைக்கழக பேரவையின் மாதாந்த கூட்டத்திலேயே இந்தத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை பேராசிரியர் கி.விசாகரூபன் மற்றும் விலங்கியல் துறை பேராசிரியர் எஸ்.நோபிள் சுரேந்திரன் ஆகியோரே மூதவையின் சார்பில் பேரவையினால் துணைவேந்தர் தெரிவுக்கான மதிப்பீட்டுக் குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களைத் தெரிவு செய்வதற்கென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய சுற்றுநிருபத்தின் வழிகாட்டுதல்களுக்கமைய துணை வேந்தர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்களில் இருந்து தகுதி, தராதரங்களின் அடிப்படையில் புள்ளியிட்டு, பொருத்தமானவர்களில் ஆகக் கூடியது ஐந்து (ஐந்துக்குக் குறைவான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறின் ஆகக் குறைந்தது மூன்று) விண்ணப்பதாரிகளைப் பட்டியலிடும் பணியை மேற்கொள்வதற்கென மதிப்பீட்டுக் குழு ஒன்று விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் ஜூன் 9) அமைக்கப்படுதல் வேண்டும்.

இந்த மதிப்பீட்டுக்குழுவில் குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் மூதவையில் அங்கம் வகிக்கும் பேராசிரியர்கள் இருவரும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் மூவரும் இடம் பெறுவர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் மூவரில் ஒருவர் குறிப்பிட்ட பல்கலைக்கழகம் சாராத பிறிதொரு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தராகவும் குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் பேரவையில் அங்கம் வகிக்காத ஒருவராகவும் இருத்தல் வேண்டும். அவரே துணைவேந்தர் தெரிவுக்கான மதிப்பீட்டுக் குழுவின் தலைவராகச் செயற்படுவார். அத்தகைய ஒருவர் துணைவேந்தர் தெரிவுக்கான விண்ணப்பதாரிகளில் ஒருவராக முடிவுத் திகதியின் பின்னர் தெரிய வந்தால் பல்கலைக்கழகப் பேரவையின் செயலாளர் (பதிவாளர்) இதுபற்றி உடனடியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத்தி, புதிதாக வேறொருவரை நியமிக்குமாறு கோருதல் வேண்டும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் ஏனைய இருவரில் ஒருவர் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த மூத்த அதிகாரியாகவும் அமைச்சரவை அங்கீகாரமுள்ள அமைச்சு ஒன்றின் செயலாளராகவும் இருப்பார். மூன்றாமவர் அரச அல்லது தனியார் நிறுவனமொன்றின் தலைவராகவோ பிரதம நிறைவேற்று அதிகாரியாகவோ இருப்பார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மதிப்பீட்டுக் குழுவுக்கு நியமனம் செய்யப்படுபவர்களின் விபரங்கள் இந்த மாதம் முதல் வாரத்துக்கு முன்னர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

கடந்த வருடம் ஏப்ரல் 30 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் துணைவேந்தர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதன் பின் துணைவேந்தருக்கான அதிகாரங்களுடன் வாழ்நாள் பேராசிரியர் க.கந்தசாமி தகுதி வாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# நெடுந்தீவு-குறிகாட்டுவான் படகுச் சேவை இன்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

கொரோனாத் தாக்கத்தின் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையே நடைபெற்ற படகுச் சேவை இன்று திங்கட்கிழமை முதல் வழமை போல் நடைபெறுமென நெடுந்தீவு பிரதேச செயலர் சி.சத்தியசோதி தெரிவித்துள்ளார். கொரோனாத் தாக்கத்தையடுத்து நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகுச் சேவை கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையில் இன்று முதல் வழமை போல் படகுகள் சேவையில் ஈடுபடும். காலை 8 மணியளவில் குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்குப் புறப்படும் வடதாரகை மீண்டும் பிற்பகல் 4 மணியளவில் குறிகாட்டுவானை வந்தடையும். ஏனைய படகு சேவைகளும் வழமை போன்று இடம்பெறும்.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக் காரணமாக சமூக இடைவெளியைப் பேணியே பொதுமக்கள் படகுகளில் பயணிக்க வேண்டியுள்ளமையால் மேலதிக படகுகளும் சேவையில் ஈடுபடுமென வும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-5-18)

# விவசாய நவீனமயமாக்கல் திட்ட விண்ணப்ப கால எல்லை நீடிப்பு

## அங்கஜன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விவசாய நவீனமயமாக்கல் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் தொடர்பில் அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் திட்டத்திற்காக விண்ணப்பிக்கும் கால எல்லை ஜூலை 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொரோனாத் தொற்றினால் சீரற்ற சமூக நிலையில் நவீனமயமாக்கல் திட்டத்திற்கான விண்ணப்பங்களை உரிய திகதியில் அனுப்ப முடி



யாதிருந்தமையால் அதன் காலத்தை நீடிக்குமாறு பெருந் தோட்டக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி, கமத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரனவிடம் முன்னாள் கமத்தொழில் பிரதியமைச்சரும் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் விடுத்த கோரிக்கையையடுத்து இந்தக் காலநீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஜ-2-5-8)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் பி.சி.ஆர்.பரிசோதனை மத்திய நிலையம்

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பி.சி. ஆர்.பரிசோதனை மத்திய நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி மீளத் திறக்கப்படவுள்ளது. இதன்போது அங்கு பி.சி.ஆர். பரிசோதனை மத்திய நிலையத்தையும் திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் உப தலைவர் ரஜீவ் சூரியஆரச்சி தெரிவித்தார்.

இதனடிப்படையில், சுகாதார தரப்பினரின் ஆலோசனைக்கமைய விமான நிலையத்தில் தனியான பிரிவொன்று ஸ்தாபிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஜ-8)

# 63 ஆயிரத்து 935ஐ தாண்டியது பி.சி.ஆர். பரிசோதனைகள்

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் கொரோனாத் தொற்றினை அடையாளம் காண்பதற்காக மேற் கொள்ளப்படுகின்ற பி.சி.ஆர்.பரிசோதனைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

இதனடிப்படையில் நேற்று முன்தினம் ஆயிரத்து 727 பி.சி. ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை 63 ஆயிரத்து 935 ஆக அதிகரித்துள்ளது. (ஜ-8)

# இரண்டாம் கட்டமாக கொரோனா அதிகரிக்கும் அபாயம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் இரண்டாம் கட்டமாக கொரோனா தொற்றாளர்கள் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள நிலையில், பொது மக்கள் அதிக அளவில் ஒன்று கூடுவதனால் இந்த நிலைமை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

அத்துடன், தற்போது நாட்டில் கடற்படையினர் மற்றும் வெளிநாட்டிலிருந்து வந்தோர் ஆகிய இரு குழுக்களுக்கு மாத்திரமே கொரோனா தொற்று அடையாளப்படுத்தப்படுகிறது.

எனினும், சூழ்நிலை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கப்படாவிட்டால், நாட்டில் இரண்டாம் கட்டமாக கொரோனா தொற்றாளர்கள் அதிகரிக்கும் அபாயம் ஏற்படும்.

இதேவேளை, புதிய வாழ்க்கை முறைமைக்காக சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்கள் பெரும்பாலானோரினால் ˚ பின்பற்றப்படுவதில்லை.

இது கொரோனா தொற்றுக்கான அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேலும் எச்சரித்தது. (ஜ-8)


## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியராக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

Tel-0773405951
E mail -engchelvam@gmail.com
(2913)

## மணமகன் தேவை

1995.12.27
கத்தோலிக்கம்(R.C)
சதயம் 1 ம் பாதம்
A/L அழகுக்கலை பயிற்சி பெற்றவர்
எதிர்பார்ப்பு- வெளிநாடு மட்டும்.
Tel-0775259541
(2927)

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: அவிட்டம் 1
கி.பா: சூரி, செவ் 6 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. விற்பனைப் பிரதிநிதி
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/7019

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 19 ½ செவ் 1 இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. லண்டன் PR
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/7025

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்:விசாகம்
கி.பா: செவ் 12 இல்.
தகைமை/தொழில்:க.பொ.த.உ.த. மெக்கானிக்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/7027

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூசம் 1
கி.பா: செவ் 7 இல்
தகைமை/தொழில்: பட்டதாரி. லண்டன்
எதிர்பார்ப்பு: உள்நாடு எனின் அரச தொழில். வெளிநாடு எனில் PR உள்ள பெண்
தொ.இ: B/7036

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 3
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: B.A.
எதிர்பார்ப்பு: படித்த பொருத்தமான மணமகன்
தொ.இ: G/7700

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ரோகினி 3
கி.பா: 40 ¼ சூரி செவ் 4 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: பட்டதாரி. அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம்
தொ.இ: G/7705

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா: 63 செவ் 11 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: பட்டதாரி
எதிர்பார்ப்பு: உள்நாட்டில் அரச உத்தியோகம் பார்க்கும் வரன்
தொ.இ: G/7709

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 3
கி.பா: 18 3/4 செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:க.பொ.த.உ.த.
எதிர்பார்ப்பு:.வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7710

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# சுதேச மருத்துவ திணைக்களம்,வடமாகாணம்

## பெறுகைகளுக்கான அழைப்பு

## பாதுகாப்புச் சேவை-சுத்திகரிப்புச் சேவை- 2020/2021

1. வட மாகாண சுதேச மருத்துவ திணைக்கள பெறுகைகள் குழுத்தலைவர் மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் கீழ் இயங்கும் ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு தேவையான பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவைகளுக்கான சேவையாளர்களிடமிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொடர் இல | பெறுகை இல. | சேவையின் விபரம் | தேவைப்பாடு | உத்தரவாத வைப்புப்பணம் ரூபா. | உத்தரவாத வைப்புப் பணம் காலம் |
|---|---|---|---|---|---|
| 01. | NP/22/02/FM04/SECURITY/2020 | பாதுகாப்புச் சேவை - 2020/2021 | 21 | 150,000.00 | 19.10.2020 |
| 02 | NP/22/02/FM04/CLEANING/2020 | சுத்திகரிப்புச் சேவை - 2020/2021 | 56 | 150,000.00 | 19.10.2020 |

2. பாதுகாப்புச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவைக்கான விலைக்கேள்விதாரர்கள் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்
   - விலைக்கேள்விதாரர் சேவை தொடர்பாக வலுவான வியாபார பதிவு சான்றிதழை கொண்டிருத்தல் வேண்டும்
   - பாதுகாப்புச்சேவைக்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்
   - கிளை அல்லது தலைமை அலுவலகம் வடக்கு மாகாணத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
3. பொருத்தமான கேள்வி வைப்பு பணம் ஆவணம் பெறுகைகளுடன் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அன்றேல் நிராகரிக்கப்படும்.
4. தகுதிவாய்ந்த விலைக்கேள்விதாரர் மேலதிக விபரங்களையும், கேள்விப் பத்திர விண்ணப்பங்களையும், மாகாண சுதேச மருத்துவ திணைக்களம், வடக்கு மாகாணம், இல 611, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அலுவலக நாட்களில் முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 15.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
5. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இத் திணைக்களத்தில் கிடைக்கும் 'Application for Bid Documents' என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய பெறுகைக்கு மீளளிக்கமுடியாத ரூபா 2000.00 காசாக செலுத்தி, ஆங்கில பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 02.06.2020 தொடக்கம் 22.06.2020 வரையான காலப்பகுதியில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
6. விலைக்கேள்விகள் அனைத்தும் 23.06.2020ஆம் திகதி முற்பகல் 10.00க்கு முன்பதாக சேர்க்கப்படல் வேண்டும். கடித உறையின் மேல்மூலையில் "கணக்காளர், பெறுகைக்குழு, பாதுகாப்புச்சேவை " சுத்திகரிப்புச்சேவை - 2020/2021, பெறுகை இல : ... சேவையின் விபரம் : ....தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத, விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாமல் திருப்பியனுப்பப்படும்
7. விலைக்கேள்வித்தாரர்களிற்கான முன் பெறுகைக் கூட்டம் (Pre Bid Meeting) ஆனது 11.06.2020ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தில் நடைபெறும்
8. விண்ணப்பதாரர் அல்லது அவர்களின் எழுத்துமூலம் அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதிகள் மட்டுமே பெறுகைகள் திறக்கப்படும் போது அனுமதிக்கப்படுவர்.
9. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

Dr.திருமதி.சி.துரைரட்ணம்,
தலைவர், மாகாண திணைக்கள பெறுகைகள் குழு,
வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களம்,
இல 611, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021-222-0824 தொலைநகல் : 021-2220822
( சி-9850)

# பாடசாலைகளை மீள ஆரம்பித்தல் தொடர்பான ஆலோசனைகள் அடங்கிய சுற்றுநிருபம்

(கொழும்பு)

பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகளை மீள ஆரம்பித்தன் பின்னர் பின்பற்ற வேண்டிய தகுந்த வழிகாட்டலைத் தயாரிக்குமாறு கல்வி அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது.

இது தொடர்பிலான ஆலோசனைகள் அடங்கிய சுற்றுநிருபம், மாகாண மற்றும் வலய க் கல்வி பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் M.H.M. சித்ரானந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை, சுகாதார நிலைமை மற்றும் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கமைய குறித்த சுற்றுநிருபம் தயாரிப்பது அவசியமாகும்.

மீண்டும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் போது, உயர்தர மற்றும் சாதாரணதர மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சின் செயலாளர் M.H.M. சித்ரானந்த மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# க.பொ.த.உயர்தரத்தில் கல்விகற்பதற்கு கல்வி அமைச்சின் அனுமதி பெறவேண்டும்

(கொழும்பு)

2019 க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்கு தோற்றி இவ்வருடம் உயர்தரத்தில் கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் கல்வி அமைச்சில் அனுமதி பெற்ற பின்னரே எந்த ஒரு பாடசாலையிலும் கல்வி பயில முடியும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

குறித்த மாணவர்கள் ஒன்லைன் **(Online)** மூலமாகவே விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்த முடியும் எனவும் விண்ணப்பிப்பதற்கு **https://info.moe.gov.lk/foreign registration** எனும் இணையத்தள முகவரி ஊடாக விண்ணப்பிக்க முடியும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த முறையின் கீழ் ஒரு மாணவர் 10 பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும். ஒவ்வொரு பாடசாலைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 2020.06.12 ஆகும். கல்வி அமைச்சு இந்த விண்ணப்பங்களை அந்தந்த பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பிவைக்கும்.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் மாணவர்கள் சான்றிதழ்கள் மற்றும் பிற உரிய ஆவணங்களுடன் தோற்ற வேண்டும். விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு தொடர்புக்கான குறியெண் தரப்படும்.

077 785 9089, 077 375 0458 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் என கல்வி அமைச்சு அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# பாடசாலைகளில் வசதிகளை ஏற்படுத்த அமைச்சிடம் போதுமான நிதி இல்லை

(கொழும்பு)

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கு முன்னர் உடல் வெப்பநிலையை அளவிடுவதற்கான வெப்பமானி, மாணவர்கள் கை கழுவுதற்கான ஏற்பாடுகள் மற்றும் முதலுதவியை வழங்குவதற்கான அறை வசதிகள் உள்ளிட்ட விடயங்களை செய்வதற்கு போதுமான நிதி அமைச்சிடம் இல்லை என கல்வி அமைச்சின் செயலாளர் ஆங்கில ஊடகமொன்றிற்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "பாடசாலைகளில் கை கழுவுவதற்கு தேவையான வசதிகளை செய்வதற்கு 418 மில்லியன் தேவைப்படுகிறது. இந்த நேரத்தில், கல்வி அமைச்சுக்கு 100 மில்லியன் மட்டுமே இருப்பு உள்ளது"

இருப்பினும் இந்த வசதிகளுக்காக நிதி ஒதுக்கும்போது, இத்தகைய வசதிகளை உருவாக்க அனுசரணையாளர்கள் / நலன் விரும்பிகள் / பழைய மாணவர்களை ஈர்க்க வழி இல்லாத கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த வசதிகளை மேற்கொள்ள பெற்றோரிடமிருந்து நிதிப் பங்களிப்பு தேவையில்லை என்று அமைச்சர் பல சந்தர்ப்பங்களில் கூறியிருந்தாலும் பாடசாலைகளின் நலன் விரும்பிகள் அல்லது பழைய மாணவர்களிடம் கோரிக்கை விடுக்க அனுமதிக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாடசாலைகளுக்கு தேவையான நீர் வழங்கல் வசதிகளை எளிதாக்க அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களான பிரதேச செயலகங்கள், நகராட்சி மன்றங்கள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் ஆகியவற்றின் பங்களிப்பையும் அமைச்சு கோரியுள்ளது. (ஜ-4)

## கல்விச் செய்திகள்

# மாணவர்களுக்கான ZOOM வகுப்பு நேரஅட்டவணை

**வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் அனுசரணையில் வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம் நடத்தும் தரம் 5 மாணவர்களுக்கான ZOOM வகுப்பு நேர அட்டவணை**

01.06.2020 ஆம் திகதி மாலை 4 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை ஜே.ஜே.பெர்னான்ட் (யா/இளவாலை கொன்வன்ட் மகா வித்தியாலயம்) **Meeting ID - 889 4770 0014 Password - vz89.**

02.06.2020 ஆம் திகதி மாலை 4.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை ரி.தயாநந்தன் (அதிபர்) (யா/கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தி யாலயம்) **Meeting ID - 864 6197 7823 Password - vz89.**

03.06.2020 ஆம் திகதி மாலை 4 மணி தொடக்கம் 5 மணிவரை ஜே.ஜே.பெர்னான்ட் (யா/இளவாலை கொன்வன்ட் மகா வித்தியாலயம்) **Meeting ID - 871 6762 4299 Password - vz89.**

06.06.2020 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் 9 மணிவரை எஸ்.திலக் (யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை) **Meeting ID - 851 7363 0428 Password - vz89.**

**வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தால் க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான ZOOM வகுப்பு நேர அட்டவணை**

01.06.2020 ஆம் திகதி தமிழ் மு.ப 6.00-7.00, விஞ்ஞானம் மு.ப 7.00-8.00, கணிதம் பி.ப 3.00-4.00.

02.06.2020 ஆம் திகதி ICT மு.ப 6.00-7.00, விஞ்ஞானம் மு.ப7.00-8.00, வரலாறு பி.ப 3.00-4.00.

03.06.2020 ஆம் திகதி தமிழ் மு.ப 6.00-7.00, கணிதம் மு.ப7.00-8.00.

04.06.2020 ஆம் திகதி ICT மு.ப 6.00-7.00, விஞ்ஞானம் மு.ப 7.00-8.00, கணிதம் பி.ப 3.00-4.00.

05.06.2020 ஆம் திகதி விஞ்ஞானம் மு.ப 6.00-7.00, ICT மு.ப7.00-8.00.

06.06.2020 ஆம் திகதி கணிதம் மு.ப7.00-8.00, வரலாறு பி.ப 3.00-4.00.

07.06.2020 ஆம் திகதி விஞ்ஞானம் மு.ப 6.00-7.00, கணிதம் மு.ப 7.00-8.00, வரலாறு பி.ப 3.00-4.00 **Meeting ID - 249 156 8241**

**வலயக் கல்வி அலுவலகம் வவுனியா தெற்கு இனால் நடத்தப்படும் க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான ZOOM கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கான விஞ்ஞான பாட நேரஅட்டவணை**

01.06.2020, 04.06.2020, 05.06.2020 ஆம் திகதிகளில் விஞ்ஞானம் மு.ப 8.00-8.50 எம். ஹம்சன் (வவு/முஸ்லிம் மகா வித்தியாலயம்) (தமிழ் மொழி மூலம்) **Meeting ID-894 2325 3051.**

02.06.2020, 03.06.2020 ஆம் திகதிகளில் விஞ்ஞானம் மு.ப 8.00-8.50 ஆர். சந்திரு (வவு/பாவற்குளம் ம.வி.), (தமிழ் மொழி) **Meeting ID-845 7252 9127.**

06.06.2020, 07.06.2020 ஆம் திகதிகளில் மு.ப 8.00-8.50 எஸ்.துஸ்யந்தன் (வவு/செட்டிக்குளம் ம.வி.) (ஆங்கில மொழி) **Meeting ID-892 5355 3551.**

01.06.2020, 04.06.2020, 05.06.2020 ஆம் திகதிகளில் விஞ்ஞானம் பி.ப 3.00-4.50 எஸ்.துஸ்யந்தன் (வவு/செட்டிக்குளம் ம.வி.) (ஆங்கில மொழி) **Meeting ID-894 2325 3051.**

02.06.2020, 03.06.2020 ஆம் திகதிகளில் விஞ்ஞானம் பி.ப 4.00-4.50 பி.ரவிநாதன் (வவு/பெரிய குமேரசன் ம.வி.) (தமிழ் மொழி) **Meeting ID-845 7252 9127.**

04.06.2020 ஆம் திகதி விஞ்ஞானம் பி.ப 4.00-4.50 ஆர்.சந்திரு (வவு/பாவற்குளம் ம.வி.) (தமிழ் மொழி) **Meeting ID-892 5355 3551.**

**யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் ஒழுங்கமைப்பில் க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான ZOOM கற்பித்தல் மூலமான கணித பாட மாதிரி வினாத்தாள் (பகுதி - 1B)**

வகுப்பு காலம் 01.06.2020 மு.ப.10.00 மணி க.சாந்தகுமார் (யா/உயரப்புலம் மெதடிஸ்த மிசன் வித்தியாலயம்). **Meeting ID - 456 417 6819 Password - jaffnazone.**

**வடமாகாண கல்வித் திணைக்களத்தால் உயர்தர வர்த்தகத்துறை மாணவர்களுக்கான ZOOM கற்றலுக்கான நேர அட்டவணை**

காலம் 01.06.2020-05.06.2020 வரை வணிகக் கல்வி (வியாபாரம்) பி.ப 6.00-7.00 மணிவரை ஆசிரியர் எஸ்.கே. பாலசபேஷ், பொருளியல் (பணம்) பி.ப 7.00-8.00 மணிவரை ஆசிரியர் கே.பிரதீபன், கணக்கீடு (மாதிரி வினாத்தாள் பகுதி I-2019) பி.ப 8.00-9.00 மணிவரை ஆசிரியர் கே.பாலகஜன் **Meeting ID- 2491568241 Password- np@class.**

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் உயர்தர வர்த்தகத்துறை மாணவர்களுக்கான இணைந்த கணித பாட புள்ளிவிபரவியல் அலகிற்கான ZOOM வகுப்புக்கள்**

காலம் 01.06.2020 மற்றும் 03.06.2020 பி.ப 3.00-5.00 மணிவரை ஆசிரியர் எஸ்.சுதன் (யா/வரணி மத்திய கல்லூரி) **Meeting ID-875 5816 5516 Password- np@maths.**

# கொரோனா நிவாரண நிதிக்கான தகவல்களை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்

## ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

கொவிட் - 19 வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கைக்குக் கிடைத்த நிதி, பொருள்சார் நன்கொடைகள் மற்றும் அன்பளிப்புக்கள் தொடர்பான தகவல்களை அரசாங்கம் சுயமாக முன்வந்து வெளிப்படுத்த வேண்டும் என ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இது. குறித்து ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அசோக ஒபேசேகர பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொவிட் - 19 வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கைக்குக் கிடைத்த நிதி, பொருள்சார் நன்கொடைகள் மற்றும் அன்பளிப்புக்கள் தொடர்பான தகவல்களை சுயமாக முன்வந்து வெளிப்படுத்துவதனூடாக கொவிட் - 19 தொற்று நோயைக் கையாள்வதிலான பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியிலான தலைமைத்துவத்தினை இலங்கை ஏற்படுத்திக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அதன்படி இற்றைப்படுத்தப்பட்ட செலவீன விபரங்களுடனான கிடைக்கப்பெற்ற நன்கொடைகள், அன்பளிப்புக்கள் உள்ளிட்ட அனைத்து விபரங்களையும் கொண்ட இணையத்தளப் பக்கமொன்றை நிறுவுதல், கொள்முதல் செயன்முறை மற்றும் நடைமுறைப்படுத்தல் என்பவற்றின் போது நேரந்தாழ்த்தாத இற்றைப்படுத்தப்பட்ட அனைத்து அரசாங்க கேள்விப்பத்திர அறிவித்தல்களையும் தொடர்புபட்ட ஆவணங்களையும் தொழில்நுட்ப மதிப்பீடுகளையும் தீர்மானங்களையும் வெளியிடுவதற்காக இலத்திரனியல் கொள்முதல் தளத்தைப் பேணல், தகவல் அறியும் உரிமைச்சட்டத்திற்கு அமைவாகவும் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்கவும், சகல பொது அதிகார சபைகளிலும் கடுமையாகப் பதிவு முகாமைத்துவ நடை முறைகளுக்கான தேவையை மீள வலுப்படுத்தும் சுற்றறிக்கை ஒன்றை வெளியிடல் ஆகியவற்றை நிதியமைச்சு உடனடியாக செயற்படுத்த வேண்டும் என வலியுறுத்தியிருக்கிறது.

மேலும் வெற்றிகரமான கொவிட் - 19 நிதிக்கொள்கை கையாளுகையில் நிதி வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்தல், பொதுப்பொறுப்புக்களைப் பாதுகாத்தல், நிறுவன சட்ட வலிதுடைத்தன்மையைப் பேணல் என்பவற்றை சர்வதேச நாணயம் முன்னிறுத்தியிருப்பதாகவும் ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பு தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்தோடு தற்போதைய நெருக்கடி நிலையில் அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளைப் பாராட்டியிருப்பதுடன், அனைத்துத் தகவல்களையும் மக்களுடன் பகிர்ந்துகொள்வது அவர்கள் அதனடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்ளவும், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மீது நம்பிக்கையுடன் செயற்படவும் வழிவகுக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது. (ஜ-4)

# உணவகமொன்றின் மீது துப்பாக்கிச்சூடு!

## 3 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கல்கிஸை - சொய்சாபுர பகுதியில் உணவகமொன்றின் மீது துப்பாக்கி பிரயோகிக்கப்பட்ட போது, உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டில் கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் பணிபுரிந்து வந்த கான்ஸ்டபிள் இருவர் உட்பட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

கல்கிஸை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சொய்சாபுர பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு இனந்தெரியாத நபர்களாலே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளதாகவும் சொய்சாபுர மைதானத்திற்கருகிலிருந்து காரில் வந்துள்ள நபர்கள் உணவகத்தின் மீது துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் சம்பவத்தின் போது அவ்விடத்திலிருந்த சோதனைச் சாவடியில் கடமையில் ஈடுபட்டிருந்த கான்ஸ்டபிள்கள் இருவர் உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூவரும் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளாமலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களே பணி இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஜ-4)

# பொறியில் சிக்கிய மற்றொரு சிறுத்தை



(யட்டியாந்தோட்டை)

யட்டியாந்தோட்டை சீபொத் பகுதியில் பொறியொன்றில் சிக்கிய நிலையில் மற்றுமொரு சிறுத்தை நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு சிக்கிய 5 வயதான ஆண் சிறுத்தை வனஜீவராசிகள் அதிகாரிகளால் மயக்கப்பட்டு பிடிக்கப்பட்டுள்ளது. வீடொன்றின் பின் பகுதியில் வைக்கப்பட்ட பொறி யில் சிக்கிய சிறுத்தையை சுமார் 6 மணிநேர முயற்சியின் பின்னர் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மீட்டெடுத்துச் சென்றுள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை நல்லதண்ணி லக்ஷபான தோட்டம் வாழமலை பகுதியில் கம்பிவலை பொறியில் சிக்கிய அரிய வகை (panthera pardus kotiya) கருஞ்சிறுத்தையொன்று சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... 2049


facebook

### நிவேதா




1000 வெட்டுக்கிளியை பிடிச்சிட்டு வந்தா ஒரு குவாட்டர் இலவசம்னு சொல்லுங்க ஒரே நாள்ல வெட்டுக்கிளி இனமே அழிஞ்சிடும் ஐடியா இல்லாத பசங்க

### ஆரவ்




### சுமதி



மின்சாரமும் சரி... சம்சாரமும் சரி... விட்டுட்டுப் போகும் போதுதான் அருமை தெரியும்

### மகேஷ்



கசப்பான வேப்பம் பூவிலிருந்து தேனீக்கள் தேனை எடுப்பதில் தவறுவதில்லை... சில கசப்பான அனுபவங்கள் நமக்கு நல்ல விடயங்களை கற்றுத்தர ஒருபோதும் தவறுவதில்லை

### கமலா



என்னைப் பற்றி புறம் பேசுபவர்களுக்கும் என்னைத் தூற்றிப் பேசுபவர்களுக்கும் என்னைப் பிடிக்காதவர்களுக்கும் என்னைப் புரியாதவர்களுக்கும் நான் கூறும் ஒரே பதில் நல்லா இரு

### வருண்



எதிர்பார்த்த போது கிடைக்காத எதுவும் அதற்குப் பிறகு எத்தனை முறை கிடைத்தாலும் சந்தோசம் கொடுப்பதில்லை... அன்பு கூடத்தான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இரத்ததான முகாம்



நானாட்டான் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் நானாட்டான் பிரதேச செயலகம் மற்றும் நானாட்டான் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து நடத்திய இரத்ததான முகாம் கடந்த வெள்ளிக்கிழமை நானாட்டான் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

நானாட்டான் பிரதேச செயலாளர் மா.சிறீஸ்கந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இரத்ததான முகாமில் நானாட்டான் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் வி.ஆர்.சி. லெம்பேட், மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்,கிராம அலுவலகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இளைஞர்கள், யுவதிகள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.

(படம்-மன்னார் செய்தியாளர்)



அளவெட்டி தவளக்கிரி இளை ஞர் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் நேற்று முன்தினம் சனிக் கிழமை அளவெட்டி வடக்கு சனச மூக நிலையத்தில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் நடமாடும் இரத்த வங்கிப் பிரிவினர் பங்களிப்புடன் நடைபெற்றது. வைத்திய கலாநிதி சின்னத்துரை பாலச்சந்திரன் ஞாப கார்த்தமாக இடம்பெற்ற குறித்த இரத்ததான முகாமில் 31 குருதிக் கொடையாளர்கள் குருதிதானம் செய்தனர்.

(படம்-குப்பிழான் செய்தியாளர்)

## டிப்பர்-வான்-ஆட்டோ விபத்தில் ஐவர் படுகாயம்

(சிலாபம்)

சிலாபம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பங்கதெனிய வெஹரகெலே பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வீதி விபத்துச் சம்பவத்தில் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்விபத்தில் படுகாயமடைந்த ஐவரும் வான் ஒன்றில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்தவர்கள் எனவும் இவர்கள் சிகிச்சைக்காக சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.


வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்டோ ஒன்று வீதியில் பயணிக்க முற்பட்ட போது, பின்பக்கமாக அதிவேகத்தில் பயணித்த டிப்பர் எதிரே வந்த வான் மற்றும் ஆட்டோவுடன் மோதி விபத்தை ஏற்படுத்தும் காட்சி அருகில் பொருத்தப்பட்டுள்ள சீ.சீ. ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய டிப்பர் மற்றும் ஆட்டோ ஆகியவற்றின் சாரதிகள் சிலாபம் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

சிலாபம் போக்குவரத்து பொலிஸார் விபத்து சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஜ-4)

## ஏ-9 வீதியில் யானை தாக்கி இருவர் படுகாயம்



(நெளுக்குளம்)

மதவாச்சி பிரதேச பூனாவை பகுதியில் யானை தாக்கி இருவர் படுகாயமடைந்துள்ளதுடன் ஆட்டோவும் சேதத்திற்குள்ளாகியுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் ஏ-9 வீதியில் பயணித்துக் கொண்டிருந்த ஆட்டோவை வீதியோரத்தில் நின்ற யானை தாக்கியுள்ளது.

இதன்போது ஆட்டோவில் பயணித்து கொண்டிருந்த தந்தையும் மகளும் படுகாய மடைந்த நிலையில் மதவாச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் ஆட்டோ முழுமையாக சேதமடைந்துள்ளது. (2-5-299)

### மன்னார் பகுதியில்

## பனைசார் உற்பத்தியை நம்பி வாழும் 300 குடும்பங்கள் நிர்க்கதி நிலையில்





(மன்னார்)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மன்னார் தீவுப்பகுதிக்குள் பனை உற்பத்திசார்ந்த தொழிலை மேற்கொள்ளும் சுமார் 8 கிராமங்களைச் சேர்ந்த 300 குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழந்து பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

குறித்த கிராம மக்கள் கூலித் தொழிலையும் விறகு வெட்டுதல், மட்டை வெட்டுதல், பனங் கிழங்கு மற்றும் ஒடியல் தயாரித்தல் போன்ற காலத்திற்கு ஏற்ற பனை சார்ந்த தொழில்களை மேற்கொண்டு தங்களது வாழ்வாதாரத்தை கொண்டு செலுத்தினர்.

எனினும் தற்போதைய நிலையில் வாழ்வாதாரத் தொழில்களை மேற்கொள்ள முடியாதுள்ளதால் அவர்கள் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

உணவிற்குக்கூட போதிய பணம் இல்லாத சூழ்நிலைக்குள் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களால் நாளாந்தம் தயார் செய்யப்பட்ட பொருட்கள் விற்பனைக்கு தயார் நிலையில் காணப்பட்ட போதும் அவைகள் முடக்கப்பட்ட நிலையில் தேங்கிக்கிடப்பதாக கவலை தெரிவித்தனர்.

இவ்வாறு அநேக வீடுகளில் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்ய இயலாத நிலையில் காணப்படுகின்றன.

குறித்த வாழ்வாதாரத்தை இழந்து உணவிற்குக்கூட கஷ்டத்தை எதிர்கொள்ளும் 8 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது துயரங்களுக்கு கைகொடுத்து உதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (5-2-285)

## மீள் சுழற்சி நிலையத்திற்கு விசமிகளால் தீவைப்பு





(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை - காக்கைதீவு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணம் மாநகர சபையின் உக்கக்கூடிய திண்மக் கழிவுகளை மீள்சுழற்சிக்குட்படுத்தும் நிலையத்திற்கு விசமிகளால் தீ வைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் திண்மக் கழிவுகளை மீள்சுழற்சிக்குட்படுத்தி இயற்கை பசளைகளை உற்பத்தி செய்யும் நிலையம் காக்கை தீவுப் பகுதியில் அமைந்துள்ளது. அந்த நிலையத்தில் கம்பி வலை வேலியைப் பிரித்து உள்ளே புகுந்த கும்பல் ஒன்று டயர்களைப் போட்டு அங்கு காணப்பட்ட குப்பைகளுக்கு தீ வைத்துள்ளது.

இது தொடர்பில் மாநகரசபை பதில் முதல்வர் து.ஈசனுக்கு அப்பகுதி மக்கள் தொலைபேசியில் தகவல் வழங்கினர்.

சம்பவம் இடம்பெற்ற பகுதியில் உள்ள பாதுகாப்புவேலி வெட்டப்பட்டுள்ளதோடு குறித்த பகுதியில் எரிந்த நிலையில் வாகன டயரும் மீட்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த பகுதியில் உள்ள முட்கம்பி வேலியை வெட்டி உட்புகுந்த நபர்கள் டயரினைகொண்டு வந்து தீயை பற்ற வைத்திருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது

சம்பவம் தொடர்பில் திண்மக்கழிவு மீள்சுழற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். அதனடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (2-5-101)

# சுதந்திரத்திற்குப் பின்
# இலங்கை பாராளுமன்றத் தேர்தல்கள்

06


கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



| பாராளுமன்றத் தேர்தல் 1956 | | | | |
|---|---|---|---|---|
| | வேட்பாளர்கள் | | | |
| A-போட்டியிட்டோர்<br>B- தெரிவு செய்யப்பட்டோர்<br>C- போடப்பட்டமொத்த வாக்குகள் | A | B | C | % |
| ஐக்கிய தேசிய கட்சி | 76 | 8 | 738,810 | 27.91% |
| ஒருங்கிணைந்த மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி | 60 | 51 | 1,046,277 | 39.52% |
| லங்கா சமசமாஜகட்சி | 21 | 14 | 274,204 | 10.36% |
| கம்யூனிஸ்ட் கட்சி | 09 | 3 | 119,715 | 4.52% |
| அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | 01 | 1 | 8,914 | 0.34% |
| இலங்கைத் தமிழரசுக்கட்சி | 14 | 10 | 142,758 | 5.39% |
| தமிழ் பாதுகாப்பு இயக்கம்(Tamil Resistance Front) | 02 | 1 | 7,931 | 0.3% |
| சுயேட்சை | 66 | 7 | 308,638 | 11,66% |
| மொத்தம் | 249 | 95 | 2,647,247 | |

ஜூலை 1960 இல் மறு தேர்தல் இடம்பெற்றது. சபாநாயகர் தேர்தலில் சுபசிங்க முதியான்செலாகே டிக்கிரி பண்டா எதிர்க்கட்சியின் பெரும்பான்மை வாக்குகளினால் சிறுபான்மை அரசாங்கத்தின் வேட்பாளரான சேர் அல்பேட் எஃப் பீரிஸை தோற்கடித்து சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## நான்காவது பாராளுமன்றம் (பிரதிநிதிகள் சபை)
## 30 மார்ச் 1960- ஏப்ரல் 1960

| பிரதமர்<br>டட்லி சேனநாயக்க | எதிர்க்கட்சித் தலைவர்<br>சீ.பி.டி. சில்வா | சபாநாயகர்<br>எஸ்.எம். டிக்கிரி பண்டா |
|---|---|---|
|  |  |  |

### இலங்கை பாராளுமன்றத் தேர்தல், ஜூலை 1960

இலங்கையின் 5ஆவது பாராளுமன்றத் தேர்தல் 1960 ஜூலை 20 இல் நடைபெற்றது. இலங்கை பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபைக்கு 151 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய இத்தேர்தல் நடத்தப்பட்டது.

மார்ச் 1960 தேர்தலில் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பலத்தைப் பெறாமையால் அதே ஆண்டில் இரண்டாம் தடவையாகத் தேர்தல் நடத்தப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க படுகொலை செய்யப்பட்ட பின்னர் அக்கட்சி பிளவடைந்திருந்தது. ஆனாலும் அவரது மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்க கட்சித் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் ஓரளவிற்குத் தனது செல்வாக்கைத் தக்க வைத்துக் கொண்டது. தனது கணவரின் கொள்கைகளை, குறிப்பாக சிங்களம் மட்டும் சட்டம், இலங்கையின் இந்தியத் தமிழர்களை இந்தியாவுக்கு நாடுகடத்தல் போன்றவற்றை முன்னெடுக்கப் போவதாகத் தேர்தல் பரப்புரைகளில் கூறிவந்தார்.

டட்லி சேனநாயக்கவின் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரை சுதந்திரக் கட்சியின் கொள்கைகளையே கொண்டிருந்தது. அதே வேளையில், சுதந்திரக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாறாக இடதுசாரிப் போக்கைத் தமது பொருளாதாரக் கொள்கைகளில் கொண்டிருந்தது. தனியார்துறை மற்றும் சமயப் பாடசாலைகளை அரசுடைமையாக்கல் இக் கட்சியின் முக்கிய கொள்கையாக இருந்தது. சுதந்திரக் கட்சி பெரும்பான்மைப் பலத்தைப் பெற்று ஆட்சியைப் பிடித்தது. திருமதி பண்டாரநாயக்க இலங்கைப் பிரதமரானார். இத் தேர்தல் இலங்கையில் மட்டுமல்ல முழு உலகத்திலுமே முக்கியத்துவம் பெற்றது. இலங்கையில் மட்டுமல்ல முழு உலகத்திலுமே முதலாவது பெண் பிரதமராக திருமதி பண்டாரநாயக்க தேர்ந்தெடுக்கப்பட்டமையே சர்வதேச அரங்கில் முக்கியத்துவத்தைப் பெற க் காரணமாயிற்று.

திருமதி பண்டாரநாயக்க கட்சித் தலைவர் (SLFP) என்ற ரீதியில், 1960 ஆம் ஆண்டு ஜூலை 21 ஆம் திகதி பிரதமராக நியமிக்கப்பட்டார். ஆனால், இவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இல்லாத காரணத்தினால், பிரதமராகத் தொடர்ந்திருப்பதை இயலுமாக்குவதற்காக 1960 ஆம் ஆண்டு ஓகஸ்ட்02 ஆம் திகதி செனற்றிற்கு இவர் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். சபாநாயகர் பெல்பொலவின் இராஜினாமாவையடுத்து 1964 ஆம் ஆண்டு ஜனவரி 24இல் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பர்னாந்து சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார்.

### இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 1965

இலங்கையின் 6ஆவது பாராளுமன்றத் தேர்தல் 1965 மார்ச் 22 இல் நடைபெற்றது. இலங்கை பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபைக்கு 151 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய இத்தேர்தல் நடத்தப்பட்டது. 1964 ஆம் ஆண்டு டிசெம்பரில் லேக்ஹவுஸ் பத்திரிகைகள் தேசியமயமாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து சில உறுப்பினர்கள் வெளியேறியதை அடுத்து சிறிமாவோ பண்டாரநாயக்கவின் அரசு பாராளுமன்றத்தில் பலம் இழந்தது. பண்டாரநாயக்கவின் தாராள தேசிய மயமாக்கல் கொள்கை காரணமாக இலங்கைத் தீவின் வணிக சமூகத்தினரின் அதிருப்திக்கு அவர்கள் ஆளாக வேண்டி வந்தது. இதனால் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியது. நாட்டின் பொருளாதாரம் நலிவடைந்தது. தீவிர உணவுப் பற்றாக்குறையால் உணவுப் பங்கீட்டு முறை நாட்டில் அமுல்படுத்தப்பட்டது.

சுதந்திரக் கட்சிக்கும் அவர்களின் மார்க்சியக் கூட்டணிக்கும் எதிராக தேசிய முன்னணி ஒன்றை அமைக்கவிருப்பதாக ஐ.தே.க.வாக்குறுதி அளித்தது. சிங்களத் தேசியவாதிகளுக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சியினருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் என ஐ.தே.க. தலைவர் டட்லி சேனநாயக்க வாக்குறுதி அளித்தார். ஐக்கிய தேசியக் கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை. ஆனாலும், ஐ.தே..க தலைவர் டட்லி சேனநாயக்க இலங்கைத் தமிழரசுக் கட்சியினரின் ஆதரவுடன் ஆட்சியை அமைத்தார். கொழும்பு தெற்கு தொகுதியில் ஜே.ஆர் ஜெயவர்த்தன (ஐ.தே.க), பெர்னார்ட் சொய்சா (லசசக) ஆகியோர் போட்டியின்றித் தெரிவாகினர். சேர் அல்பேட் பீரிஸின் இறப்பையடுத்து 1967 ஆம் ஆண்டு செப்டெம்பர் 27 இல் கொரயா சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டார்.

### இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 1970

இலங்கையின் 7ஆவது பாராளுமன்றத் தேர்தல் 1970 ஆம் ஆண்டு மே 27 இல் நடைபெற்றது. இலங்கை பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபைக்கு 151 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய இத்தேர்தல் நடத்தப்பட்டது. முக்கிய எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு மார்க்சிய இடதுசாரிகளுடன் நீண்ட கால கூட்டணியை ஏற்படுத்துவதே சரியானதாகும் எனத் தீர்மானித்தார். இதற்கமைய அவர் திரொக்சியவாதிகளான லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுடன் இணைந்து ஐக்கிய முன்னணி என்ற கூட்டணியை உருவாக்கினார்.

பொதுத் திட்டம் என அழைக்கப்பட்ட இவர்களின் கூட்டுத் திட்டத்தில், பரவலான தேசியமயமாக்கல், சோவியத் சார்பு வெளியுறவுக் கொள்கை, சோல்பரி அரசியலமைப்பை ஒழித்தல் போன்றவை முக்கிய அம்சங்களாக இருந்தன. மாறாக ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி யின் அரசு முதலாளித்துவப் போக்கைக் கடைப்பிடித்து வந்தது. அது பணக்காரர்களின் கட்சி என்ற பெயரைப் பெற்றது. இதனால் சாதாரண மக்களிடையே ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரங்கள் எளிதில் செல்வாக்கைப் பெற்றது. ஐக்கிய முன்னணி பெரும் வெற்றியைப் பெற்றது.

மொத்தம் 151 இடங்களில் ஐக்கிய முன்னணி 116 இடங்களைக் கைப்பற்றியது. இத்தேர்தலில் வெலிமடைத் தேர்தல் தொகுதியில் ஆர்.எம்.பண்டார (ஐக்கிய முன்னணி) போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். திருமதி பண்டாரநாயக்க இலங்கைப் பிரதமரானார்.

தமிழ் பேசும் பகுதிகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் வெற்றி பெற்றன. தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் மூன்று உறுப்பினர்களும் பின்னர் ஐக்கிய முன்னணியில் இணைந்தனர்.

(தொடரும்)

# மற்றவர்களை குறை கூறுவதை நிறுத்தி உங்களை நீங்கள் திருத்திக் கொள்ளுங்கள்



## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் மக்களுக்கு சலுகைகளைப் பெற்றுக் கொடுக்க முடியவில்லை என்றால் அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அதனை விடுத்து எதிர்த்தரப்பினர் மீதோ , முன்னைய அரசாங்கத்தின் மீதோ குறை சொல்வது முறையற்ற செயற்பாடாகும் என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தால் மக்களுக்கு எவ்வித சலுகைகளையும் வழங்க முடியவில்லை. கொரோனா வைரஸ் பரவலை இதற்கு காரணமாக காட்டினாலும், வைரஸ் பரவலுக்கு முன்னரிருந்தே அரசாங்கம் எவ்வித பயன்தரும் செயற்பாடுகளையும்மேற்கொள்ளவில்லை. இதேவேளை பசில் ராஜபக்ஷ ஊடக சந்திப்பொன்றின் போது தனியார் துறை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க தனியார் துறை உரிமையாளர்களுக்கு போதிய நிதி வழங்கியுள்ளதாக தெரிவித்திருந்தார்.

இதனால் தனியார்துறை ஊழியர்கள் நிறுவனங்கள் நிதியைப் பெற்றுக் கொண்டு தங்களுக்கு சம்பளம் வழங்கவில்லைஎன்று தவறான எண்ணைத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். இவ்வாறு யாருக்குமே நிதி பெற்றுக் கொடுக்கப்படவில்லை. ஏன் பசில் இவ்வாறு போலிப் பிரசாரம் செய்து மக்களை ஏமாற்றி வருகின்றார்.

இதேவேளை மே மாத அரச ஊழியர்களின் ஊதியத்தை நிறுத்தி வைப்பதனால் 100 பில்லியன் ரூபாவை சேர்த்து வைக்க முடியும் என்று ஜனாதிபதி செயலாளர் பி.பீ.ஜயசுந்தர தெரிவித்திருந்தார். இவ்வாறு எவ்வளவு நிதியை தற்போது சேர்த்து வைத்துள்ளார்கள் என்பதை தெரியப்படுத்த வேண்டும்.

தற்போதைய அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பேற்ற போது நெற்களஞ்சியசாலையில் ஒரு நெல்மணிகூட களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்று அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்திருந்தார். இது உண்மைக்கு புறம்பான தகவலாகும். நாங்கள் 42 மெட்ரிக் தொன் நெல்லை களஞ்சியப்படுத்தியிருந்தோம். அது தொடர்பில் ஆதாரங்களும் எம்மிடம் இருக்கின்றன. அதே வேளை நுகர்வோர் அதிகார சபையிடம் அறிந்து கொள்ள முடியும்.

இந்த நெல்லுக்கு என்ன நடந்தது , அது எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பில் அவர்கள் நாட்டுக்கு தெரியப்படுத்த வேண்டும். அரசாங்கத்திற்கு உரியமுறையில் முகாமைத்துவம் செய்யமுடியவில்லை என்றால் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இதனை விடுத்து கடந்த அரசாங்கத்தையும் , எதிர்க்கட்சியையும் குறைகூறி வருவது நியாயமற்ற செயற்பாடாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# கைக்குண்டு, துப்பாக்கிகளுடன் வெல்லம்பிட்டியவில் இருவர் கைது


(கொழும்பு)

கைக்குண்டு மற்றும் துப்பாக்கிகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை வெல்லம்பிட்டிய பகுதியில் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பொலிஸ்மற்றும்பாதுகாப்புப்படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டொன்றும் இரண்டு துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட துப்பாக்கிகளில், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியும் அடங்குகிறது. கொலன்னாவ பகுதியைச் சேர்ந்த 25 மற்றும் 31 வயதான இரண்டு இளைஞர்களே கைது செய்யப்பட்டனர். சாலமுல்ல கொலன்னாவ பகுதியில், வீடொன்றின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த வான் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியமை, ஒருவர் மீது துப்பாக்கிப்பிரயோகம்மேற்கொண்டு கொலை செய்தமை ஆகிய குற்றங்களால் தேடப்பட்டு வந்த சந்தேகநபர்களே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லம்பிட்டிய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-8)

# புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பில் அக்கறை வேண்டும்

## முன்னாள் சபாநாயகர் வலியுறுத்து


Karu Jayasuriya
@KaruOnline

Some migrant workers in the gulf have to return due to the pandemic. They have been a source of strength to the country. Their concerns for health and safety need the attention of the authorities. Extremely careful measures are needed to prevent the disease from spreading.

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் சக்தியாகத் திகழ்ந்த புலம்பெயர் தொழிலாளர்களின் சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பில் தற்போது உயர் அக்கறை காண்பிக்கப்பட வேண்டுமென முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தனது டுவிட்டரில் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது.

மத்திய கிழக்கு மற்றும் வளைகுடா நாடுகளில் பணியாற்றும் இலங்கைத் தொழிலாளர்கள் கொரோனா வைரஸ் பரவலின் காரணமாக மீண்டும் நாடு திரும்ப வேண் டியதொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் எமது நாட்டின் பொருளாதாரத்தின் ஓர் பலமாகத் திகழ்ந்து வந்திருக்கிறார்கள்.

எனவே தற்போதைய நெருக்கடி நிலையில் அவர்களது சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கு உரிய அதிகாரிகள் முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

அதேவேளை இந்த வைரஸ் தொற்றுநோய் பரவுவதைத் தடுப்பதற்கு உயர் பாதுகாப்புடன் கூடிய முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அந்தப் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பாராட்டு!

ஒருத்தன் ஏதாவது வேலை கிடைத்தால் நல்லது என்று அலைந்து கொண்டிருந்தான்.

ஒரு இடத்திலே அவனுக்கு ஒரு வேலையும் கிடைத்தது. அதன் பின்பு கொஞ்ச நாள் கழித்து அவனைப் பார்த்தேன்.

"இப்போது வேலையை விட்டால் நல்லது என்று நினைக்கிறேன்" என்றான். என்ன விடயம் என்று விசாரித்தேன்.

"என்ன சேர் செய்வது? எனக்கு மேலே இருக்கிறவன் ஒரு பெரிய கோபக்காரனாக இருக்கிறான். எதுக்கு எடுத்தாலும் கோபப்படுகிறான். அனுசரித்துப் போறது ரொம்ப கஷ்டமா இருக்கு. அதுதான் அந்த இடத்தை விட்டு விலகிவிடலாம் என்று பார்க்கிறேன்" என்றான்.

இப்படி இவன் சொன்னதைக் கேட்டதும் ஏற்கனவே நான் படித்த ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது. அதை அவனிடம் சொன்னேன். அது என்ன விபரம் என்றால் நியூயோர்க்கிலே ஒரு மனநல மருத்துவ நிபுணர் இருந்தார். ஒருநாள் அவரைத் தேடி ஒரு பெண் வந்தாள்.

"டாக்டர் உங்களிடம் ஒரு முக்கியமான ஆலோசனை கேட்கலாம் என்று வந்திருக்கிறேன்" என்றாள் அந்தப் பெண். "என்னம்மா விடயம்" என்று விசாரித்தார் அவர்.

அந்தப் பெண் விபரத்தைச் சொன்னாள்..."டாக்டர் நான் ஒரு தொழிற்சாலையிலே தலைமை அதிகாரியின் சுருக்கெழுத்தாளராக வேலை பார்க்கிறேன்". அந்த அதிகாரி ஒரு சிடுமூஞ்சி. எதுக்கெடுத்தாலும் கோபப்படுகிறார்.

அவருடைய கோபதாபங்களை என்னாலே சமாளிக்க முடியவில்லை. மனதுக்கு ரொம்ப கஷ்டமாக இருக்கு. தாங்க முடியவில்லை. இரவு முழுவதும் சரியாகத் தூங்க முடியவில்லை. அந்த அளவுக்கு வேதனையாக இருக்கு. அதனாலே இந்த வேலையை விட்டு விடலாம் என்று பார்க்கிறேன். அதற்கு முன் உங்களுடைய ஆலோசனையை கேட்டுக்கொள்ளலாம் என்பதற்காக வந்திருக்கிறேன். என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டாள் அந்தப் பெண்.

அந்த நிபுணர் இந்தப் ,பெண் சொல்லுறது எல்லாத்தையும் பொறுமையாக, கவனமாக கேட்டுக்கொண்டார். பின்பு சொன்னார்...

"அம்மா நான் ஒரு யோசனை சொல்கிறேன். அதன்படி மூன்று மாதம் நடந்துகொள். அதன்பின்பு என்னிடம் வா இராஜினாமா செய்யலாமா வேண்டாமா என்பதைப்பற்றி யோசிப்போம்" என்றார்.

"என்ன செய்ய வேண்டும் சொல்லுங்க" என்று கேட்டாள் அந்தப் பெண். அந்த நிபுணர் தன் யோசனையைச் சொன்னார். இதோ பாரம்மா...சிடுமூஞ்சியிடமும் சில நல்ல குணங்கள் பதுங்கியிருக்கும். அதையெல்லாம் தேடிக் கண்டு பிடித்து வாயார பாராட்டு. ஒரு நாளைக்கு ஒரு பாராட்டு என்று வைத்துக்கொள். இப்படி தொடர்ந்து செய் பார்க்கலாம் என்று சொல்லி அனுப்பினார்.

அந்தப் பெண் மறுநாள் வழக்கம் போல அலுவலகத்துக்குப் போய் சேர் உங்கள் சேட் ரொம்ப நல்லா இருக்கு என்று மனதார பாராட் டினாள். அடுத்த நாள். அவனுடைய ஆங்கில எழுத்து நடையைப் பாராட்டினாள். இப்படி தினமும் ஒரு பாராட்டு.

இப்படி பாராட்டு ஏற ஏற சிடுமூஞ்சித்தனம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்து விட்டது. மூன்று மாதம் கழித்து அந்தப் பெண் மறுபடியும் மனநல மருத்துவ நிபுணரிடம் வந்தாள்.

"என்னம்மா வேலையை இராஜினாமா செய்யலாமா" என்று கேட்டார் அந்த நிபுணர். "அது எப்படி முடியும்" என்றாள் அந்தப் பெண். ஏன் என்று கேட்டார் அவர்.

"நான் அவரைக் கல்யாணம் செய்யப் போகிறேன். இப்ப அவர் என்னுடைய காதலர். இதோ போட்டிருக்கிறேனே வைர மோதிரம் அது அவர் எனக்கு பரிசாகக் கொடுத்தது" என்று வெட்கப்பட்டுக் கொண்டே சொன்னாள்.

சிடுமூஞ்சிக்கு வந்த வாழ்வைப் பாருங்கள் சேர். கொஞ்ச நாளிலே அவர்கள் இரண்டு பேரும் கல்யாணம் செய்யப் போகிறார்களாம்.

இதுதான் நான் பேப்பரில படித்த செய்தி.

இதை என்னிடம் வந்த நம்ம ஆளிடம் சொன்னேன். அவன் கொஞ்சம் யோசித்தான். "சேர் நானும் என் முடிவை மாற்றிக் கொள்ளப் போகிறேன். இதே அணுகுமுறையைக் கடைப்பிடிக்கப் போகிறேன்.

எனக்கு மேலே இருக்கிறானே ஒரு சிடுமூஞ்சி... அவனை சுவிய விரைவில் மாற்றிவிடலாம் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு. உங்கள் யோசனைக்கு ரொம்ப நன்றி. ஒரு மூன்று மாதம் கழித்து நானும் ஒரு கல்யாணப் பத்திரிகையோடு உங்களை வந்து சந்திக்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

அது எப்படி என்றேன் ஒன்றும் புரியாமல். "அந்த சிடுமூஞ்சிக்கு ஒரு பெண் இருக்கிறாள். என்னோட படித்தவள். நான் அவரிடம் வேலைக்குச் சேர்ந்ததே அதுக்காகத்தான் சேர்" என்றான் அசடு வழிய!

உனக்காக வாழ்கிறேன் என்று பிறர் சொல்வதை விட உன்னால் வாழ்கிறேன் என்று ஒருவரைச் சொல்ல வை! – அன்னை திரேசா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மலையகத் தமிழ் அரசியலில் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும்

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இறுதிக்கிரியை நேற்றுப் பிற்பகல் நடந்தேறியது.

அவரின் மறைவு மலையகத் தமிழ் மக்களிடம் எத்துணை தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது என்பதை அனைவரும் அறிந்திருப்பீர்கள்.

ஆம், அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் கடந்த 26ஆம் திகதி மரணமடைந்தார்.

அவரின் மறைவுச் செய்தி அறிந்ததும் மலையகத் தமிழ் மக்கள் அலை அலையாகத் திரண்டு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்கு அஞ்சலி செலுத்தினர்.

கொரோனா தொற்றுக் காரணமாக தனிநபர் இடைவெளி பேண வேண்டியதன் அவசியம் மற்றும் இடையிடையே அமுல்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டம், போக்குவரத்துத் தட்டுப்பாடு என்ற வரையறைகளுக்கு மத்தியில் ஒட்டுமொத்த மலையகத் தமிழ் மக்களும் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் என்பதில் கொண்டிருந்த உறுதிப்பாட்டைப் பார்த்தபோது உண்மையிலேயே மனம் நெகிழ்ந்து போயிற்று.

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவு மலையகத் தமிழ் மக்களுக்கான இழப்பு என்பதோடு மட்டும் அந்தச் சம்பவத்தை நிறுத்திவிட முடியாத அளவில், அதனைக் கடந்தும் சிந்திக்கின்ற அளவில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுக்கு மலையகத் தமிழ் மக்கள் ஒன்றுதிரண்டு மனம் நெகிழ்ந்து செலுத்திய அஞ்சலி அமைந்துள்ளது.

இவற்றையெல்லாம் ஆழ்ந்து சிந்திக்கின்ற போது, அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மீது மலையகத் தமிழ் மக்கள் கொண்ட நம்பிக்கை, மலையகத் தமிழ் அரசியலின் பலம், அவர்களிடம் இருக்கக்கூடிய ஒற்றுமை, தங்கள் தலைவனுக்கான அங்கீகாரம் எனப் பல்வகை ஆளுமைகள் தெரிய வருகின்றன.

அதேநேரம் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான்; தன்னை நம்பிய மலையகத் தமிழ் மக்களுக்கு விசுவாசமாக நடந்துள்ளார் என்பதும்

மலையகத் தமிழ் மக்களிடையேயான ஒற்றுமைப்பலத்தை சிதையவிடாமல் பாதுகாத்துள்ளார் என்பதும்

மலையகத் தமிழ் பரப்பில் இருக்கக்கூடிய ஏனைய அரசியல் கட்சிகளுடன் நல்லுறவைப் பேணியுள்ளார் என்பனவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது.

இவற்றையெல்லாம் வைத்து நோக்கும் போது, எங்கள் அரசியல் தலைவர்கள் எந்த மாட்டு என்றே எண்ணத் தோன்றும்.

எதுவாயினும் மலையகத் தமிழ் அரசியலில் இருந்து நம் தமிழ் அரசியல் தரப்புகள் நிறையவே கற்றுக் கொள்ள வேண்டும் என்பதுதான் இங்கு முக்கியமானது.

# புகைப்பதால் வருடாந்தம் 20 ஆயிரம் பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

புகைப்பிடிக்கும் பழக்கத்தின் காரணமாக, நாட்டில் வருடாந்தம் 20 ஆயிரம் பேர் உயிரிழப்பதாக மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

மே 31 ஆம் திகதியாகிய நேற்று சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத்தினம் கொண்டாடப் படுவதையொட்டி வெளியிடப்பட்டுள்ள விசேட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்ட விடயம் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் குறித்த அறிக்கையில், புகைப்பிடிக்கும் பழக்கத்தின் காரணமாக, நாளாந்தம் 55 பேர் உயிரிழக்க நேரிடுகிறது.

சர்வதேச ரீதியில், புகைப் பழக்கத்தினால், வருடாந்தம் 8 மில்லியன் மக்கள் உயிரிழக்கும்அதே வேளை, அவர்களில் 9 இலட்சம் பேர் இரண்டாம்நிலை புகைத்தலினால் உயிரிழப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

இதன் காரணமாக, புகைப்பிடிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக, இளைஞர்களும் சிறுவர்களும் இலக்குவைக்கப்படுவதாக, மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

'இளைஞர்களை புகையிலை நிறுவனத்தின் பிழையான வழிகாட்டலில் இருந்து பாதுகாத்து, அவர்களின் பாவனையை தடுப்போம்' எனும் தொனிப் பொருளில், 2020ஆம் ஆண்டிற்கான, சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினம் கொண்டாடப்படு வதாக, உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், 2003 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட புகைப்பழக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான கொள்கைக் கட்டமைப்பில் இலங்கை உள்ளிட்ட 168 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

அத்துடன், சிறுவயதில் இருந்து பிள்ளைகளின் மனதில் புகைத்தல் தொடர்பான சாதகமான சிந்தனையொன்றை உருவாக்குவதற்காக, விற்பனை நிறுவனங்களினால் பல்வேறு நுணுக்கமான முறைகள் கையாளப்படுவதாகவும் எச்சரிக்கப்பட்டது.

மேலும், இளைஞர்களும், சிறுவர்களும் போதைப் பொருள் பழக்கத்துக்கு அடிமையாவதைத் தவிர்ப்பதற்காக, 6 பரிந்துரைகள், மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையத்தினால் முன்வைக்கப்பட்டன. புகைத்தல் பொருட்களின் தனி விற்பனையை தடை செய்தல், கல்வி நிறுவனங்களில் இருந்து 100 மீற்றர் வரை புகைத்தல் பொருள் விற்பனையை தடைசெய்தல், புகைத்தல் பொருட்களுக்கு அதிகபட்ச விலையை நிர்ணயித்தல், வெற்றுப் பொதியிடல் முறைமை, தவறாக வழிநடத்தும் விளம்பரங்களைத் தடுத்தல் மற்றும் அவற்றின் மீது நடவடிக்கை எடுத்தல் ஆகிய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

இதேவேளை, புகைத்தலினால் எமது சமூகம்பாதிப்படைவதைத் தடுக்க நாம் ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன்செயற்பட வேண்டியது அவசியமாகும் என குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (ஐ-8)

## ஜூலை மாதமளவில் டெங்கு தீவிரமடையும்

(கொழும்பு)

ஜூலை மாதமளவில் டெங்கு நோய்பரவும்வேகம் அதிகரிக்குமென கொழும்பு பிரதான வைத்திய அதிகாரி றுவான் விஜயமுனி தெரிவித்தார்.

கொரோனா தொற்று குறைந்துவரும் நிலையில் டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகரித்து வருகிறது.

மழையுடன் கூடிய வானிலை காரணமாக டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் தமது வீட்டுப்புறச்சூழலை சுத்தமாக வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நுளம்பு பெருகும் வகையில் காணப்படும் பகுதிகளை சுத்தம் செய்து நீர் நிரம்பாது நுளம்புப் பெருக்கத்தை தடுக்கும் வகையில் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் வைத்திய அதிகாரி வலியுறுத்தினார். (ஐ-2-8)

## ஜி-7 மாநாடு செப்டெம்பரில்

(வோஷிங்டன்)

ஜூன் மாதம் நடைபெறவிருந்த ஜி-7 நாடுகளின் மாநாட்டை டொனால்ட் ட்ரம்ப் செப்டெம்பர் மாதத்திற்கு ஒத்தி வைத்தார்.

ஊரடங்கை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, அமெரிக்காவில் ஜி-7 உச்சி மாநாட்டை நடத்துவதை விட சிறந்த முன்னுதாரணம் இருக்க முடியாது என ட்ரம்ப் கருதுவதாக வெள்ளை மாளிகை தெரிவித்திருந்தது. அதன்படி, வோஷிங் டனில் ஜூன் மாத இறுதி யில் ஜி-7 நாடுகளின் உச்சி மாநாடு நடைபெறவுள்ளதாக கூறப்பட்டது.

இந்த நிலையில் ஜூன் மாதம் 10 ஆம் திகதி நடைபெறவிருந்த ஜி-7 நாடுகளின் மாநாட்டை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் செப்டம்பர் மாதத்திற்கு ஒத்தி வைத்தார். (ஐ)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** சாளம்பைக்குளம் ஒரு பகுதி, துட்டுவாகை ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** சீனத்துறைமுகம், வங்காலை ஒரு பகுதி, முள்ளிப்பழம், தள்ளாடி, கடலோரி வீதி, சாந்திபுரம், **South bar,** தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக்தொலைத் தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், இசைமழைத் தாழ்வு, பறயணாலங்குளம், தேக்கம் நானாட்டான் பிரதேசசபை, மாதக்கிராமம், பெரியமுறிப்பு, மடுச்சந்தி, கட்டையடம்பன், தம்பனைக்குளம், பண்ணை வெட்டுவான், கற்கடந்தகுளம், நீராவிபுரம், செட்டியார் கட்டையடம்பன், முருங்கன் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**கோபப்படும்போது மனிதனால் அதிகளவு சிறப்பாக வேலைகள் செய்ய முடியாது. அமைதியான, மன்னிக்கக்கூடிய, சமநோக்குடைய, நிலை குலையாத மனமுடையவனே அதிகளவு செயற்பட முடியும். -சுவாமி விவேகானந்தர்**

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## திறமை உயர்வு



ஏதோ ஒரு வகையிலோ, சில வகைகளிலோ, திறமைசாலியாக நீ இருக்கலாம் அல்லது அப்படி இருப்பதாக நினைத்துக் கொண்டு இருக்கலாம். உன் திறமைக்குக் கடந்த கால மனித இனத் தொடரும் இக்காலச் சமுதாயத் தொடரும் ஆதாரம் என்பதை மறந்துவிடாதே. இந்த உணர்வு உன் திறமைக்கு வீழ்ச்சி ஏற்படாது பாதுகாப்பளிக்கும். கடமையிலே உன்னை உயர்த்தும், உனது திறமையை மேலும் மேலும் அதிகரிக்கும்.


ஒவ்வொரு துறையிலும் நீ அடைந்துள்ள உயர்வைவிட அதிகமான உயர்வை அடைந்துள்ளோர் பலர் இருக்கின்றார்கள் என்பதையும் மறந்து விடாதே.

சந்தர்ப்பம் கிடைக்கும்போது உன்னைவிடத் திறமைசாலிகளைப் பாராட்டுவதும் உன்போன்ற திறமையில் முன்னேற்ற ஆர்வம் கொண்டுள்ளவர்களை உற்சாகப்படுத்துவதும் உன் திறமைக்கோர் சிறப்பளிக்கும் சாதனமாகும்.

சுயநல நோக்கத்தோடு பிறரைப் புகழ்வது கயமைச் செயல் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

# கொரோனாவின் கோரப்பிடிக்குள்ளும் நிறவெறி அடங்காத அமெரிக்கா

## நீதி கேட்டு கறுப்பின மக்கள் போராட்டம்
## பதற்ற நிலையையடுத்து நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்



**(வோஷிங்டன்)**

**அமெரிக்காவில் கறுப்பினத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் ஃபிலாய்ட் பொலிஸ் அதிகாரிகளால் கடந்த திங்கட்கிழமை கொலை செய்யப்பட்டார்.**

மரணத்திற்கு நீதிகேட்டு போராட்டக்காரர்கள் திரண்டதால் அமெரிக்காவில் பதற்றம் நிலவியது.

இதையடுத்து, நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் கறுப்பினத்தவர், வெள்ளை இனப் பொலிஸாரால் கொல்லப்படுவது தொடர்கதை ஆகி வருகிறது.

அந்தவரிசையில், மினசோட்டா மாகாணம், மின்னபொலிஸ் நகரத்தில் ஜார்ஜ் பிலாய்ட் என்ற 46 வயதான கறுப்பினத்தவர் பொலிஸ் காவலில் கொல்லப்பட்ட விவகாரம் விஸ்வரூபம் எடுத்து வருகிறது.

அவரது மரணத்துக்கு நீதி கேட்டு நாடு மினசோட்டா, நியூயோர்க், அட்லாண்டா என பல பகுதிகளிலும் கறுப்பின மக்கள் திரண்டு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இப்போராட்டங்களின்போது பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே ஆங்காங்கே மோதல்கள் வெடித்தன.

பொலிஸார் கண்ணீர்ப் புகை குண்டுகளை வெடித்து போராட்டக்காரர்களை விரட்டியடித்தனர்.

லொஸ் ஏஞ்சல்ஸ், பிலடெல்பியா மற்றும் அட்லாண்டா உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும், அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகை முன்பு கடந்த வெள்ளிக்கிழமை போராட்டக்காரர்கள், ஜார்ஜ் பிலாய்டின் புகைப்படங்களை ஏந்தியவாறு திரண்டு வந்ததால் பெரும் பதற்றம் ஏற்பட்டது. இதனால் வெள்ளை மாளிகை சிறிது நேரம் பூட்டப்பட்டது.

பெரும் பதற்ற நிலையையடுத்து அமெரிக்கா முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-5)

## புதிய பரிணாமம் எடுக்கும் கொவிட்-19 இருபது அடி தூரம் வரை பாயுமாம்

### ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(கலிபோர்னியா)

கொரோனா நோய் தொற்று 20 அடி தூரம் வரை பாயும் என அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட புதிய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

கொரோனா வைரஸ்தொற்று 6 அடி தூரம்தான் பரவும் என்று கூறப்பட்டு வருகிறது. ஆனால் கொரோனா தொற்று 20 அடி வரை பாயும் என்று அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட புதிய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

மேலும் அந்த ஆய்வில் தெரிவித்துள்ளதாவது,

"வருகிற குளிர்காலத்தில் பாதிப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது. பேசுவதன் மூலம் தெறிக்கும் எச்சில் துளிகளில் கொரோனாப் பரவுகிறது.

புவிஈர்ப்பு சக்தியால் அவை நிலத்தில் உதிர்ந்து விடுகின்றன. சில துளிகள் காற்றில் நீடிக்கின்றன. இவற்றால் 20 அடி தூரம் வரை நோய்த்தொற்று பரவக்கூடும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5)

## பாகிஸ்தானின் அத்துமீறலுக்கு தக்கபதிலடி கொடுத்தது இந்தியா

(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீரில் பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி தாக்குதல் நடத்தியதற்கு இந்திய இராணுவமும் பதிலடி கொடுத்தது. ஜம்மு காஷ்மீரின் எல்லைப் பகுதியில் பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கு இந்தியா பதிலடி கொடுத்து முகாம்களை அழித்தது.

இதைத் தொடர்ந்து பாகிஸ்தான் இராணுவம் அவ்வப்போது இந்திய எல்லையில் அத்துமீறி தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு இந்திய வீரர்களும் தக்க பதிலடி கொடுத்து வருகிறார்கள்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு பாகிஸ்தான் இராணுவத்தினர் அத்துமீறி தாக்குதலில் ஈடுபட்டனர்.

ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தில் பாலகோட் மற்றும் மெண்டார் பகுதிகளில் பாகிஸ்தான் இராணுவத்தினர் இந்திய இராணுவ நிலைகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதற்கு இந்திய வீரர்களும் தகுந்த பதிலடி கொடுத்துள்ளனர். (2-5)

## கடந்த ஆண்டில் 3 இலட்சம் பேருக்கு நிரந்தர குடியுரிமை வழங்கியது கனடா

(ஒட்டாவா)

கடந்த ஆண்டில் 3 இலட்சத்து 41 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்களுக்கு கனடா நிரந்தர குடியுரிமை வழங்கியுள்ளது. கனடாவில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் இருந்து வரும் புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை தொடர்பிலான ஆய்வின் முக்கிய முடிவுகள் சமீபத்தில் வெளியாகியது.

உலகளவில் வெளிநாட்டவர்களுக்கு அதிகளவில் குடியுரிமை வழங்கும் நாடுகளில் ஒன்றாக கனடா இருந்து வருகிறது. இதனால் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளை சேர்ந்தவர்கள், கல்வி வேலைவாய்ப்பு உள்ளிட்ட காரணங்களுக்காக அதிகளவில் கனடா செல்கின்றனர். இதனையடுத்து வெளிநாட்டினரை வரவேற்கும் வகையில் அதிகளவிலான சலுகைகள்ள கனடா வழங்கி வருகிறது.

இதில் கடந்த ஆண்டு மட்டும் 3 இலட்சத்து 41 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்களுக்கு கனடா நிரந்தர குடியுரிமை வழங்கியுள்ளது. இதனிடையே இந்த ஆண்டு மட்டும் 3 இலட்சத்து 70 ஆயிரம் பேருக்கு குடியுரிமை வழங்க கனடா திட்டமிட்டிருந்தது.

ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இந்த ஆண்டு கனடா வரும் வெளிநாட்டவர்கள் எண்ணிக்கை பாதியாக குறையும் என தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து கனடாவின் ரோயல் வங்கி மேற்கொண்டுள்ள ஆய்வின்படி இந்த ஆண்டு ஒரு இலட்சத்து 70 ஆயிரம் வெளிநாட்டவர்களே கனடா வர வாய்ப்புள்ளதாக கணித்துள்ளது.

இதுகுறித்து இந்த ஆய்வின் ஆசிரியர் ஆண்ட்ரூ அகோப்சோவிச் தெரிவிக்கையில்,

கொரோனா அச்சுறுத்த லால் இந்த ஆண்டு வெளிநாட்டவர்கள் குடியேற்றம் கடுமையாக பாதிக்கும் எனவும் அடுத்த ஆண்டின் நிலை நோய் பாதிப்பை பொருத்து கணிக்கப்படும். கனடாவில் பொருளாதாரம் வெளிநாடுகளில் இருந்து குடியேறும் மக்களை சார்ந்திருப்பதாகவும் மக்களின் வ்ருகை குறைந்தால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையலாம் என தெரிவித்தார். (2-8)

## இரு விண்வெளி வீரர்களுடன் விண்ணில் பாய்ந்தது ரொக்கெட்

(நியூயோர்க்)

சர்வதேச விண்வெளி மையத்திற்கு நாசா வீரர்களை ஏற்றிக்கொண்டு ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ரொக்கெட் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது.

நாசாவை சேர்ந்த 2 விண்வெளி வீரர்கள் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் மூலம் கடந்த 28 ஆம் திகதி சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு செல்ல இருந்தனர்.

மோசமான வானிலை காரணமாக சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு அனுப்பும் நாசா வீரர்களை அனுப்புவது ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், சர்வதேச விண்வெளி மையத்திற்கு நாசா விண் வெளி வீரர்களை ஏற்றிக்கொண்டு ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பல்கான் 9 ரொக்கெட் நேற்று அதிகாலை வெற்றிகரமாக விண்ணில்பாய்ந்தது. (2-5)

## வவுனியாவில்...

நிலையில் அவரது பெற்றோர் தேடியுள்ளனர்.

இதன்போது குறித்த இளைஞன் அருகிலுள்ள மரத்தடியில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

உடனடியாக அவரை மீட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

எனினும் ஏற்கெனவே அவர் மரணமடைந்துள்ளதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில், கருவேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த சீவரத்தினம் நிலான் (வயது - 18) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3,299)

## ஆறுமுகனின்...

அரச மரியாதையுடன் இறுதிக்கிரியைகள் முடிவடைந்த பின்னர், அன்னாரின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

கொட்டகலை, சி.எல்.எப் வளாகத்தில் இருந்து ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடல் தாங்கிய பேழை நேற்று பிற்பகல் 2 மணியளவில் நோர்வூட் மைதானத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

நாட்டில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கின்ற நிலையிலும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடலுக்கு மக்கள் அஞ்சலி செலுத்த அனுமதிக்கப்பட்டனர்.

பொலிஸாரின் அனுமதியை பெற்றவர்கள் நேற்றுக் காலை முதல் உடலின் வெப்ப நிலை அளவிட்ட பின்னர் அஞ்சலி செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

நோர்வூட் சௌமியமூர்த்தி தொண்டமான் விளையாட்டரங்கில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இறுதிக் கிரியைகள் இடம்பெற்றன.

இதன்போது, சமயத் தலைவர்கள் அன்னாரின் மறைவு தொடர்பில் இரங்கல் உரைகளையும் நிகழ்த்தினார்கள். மேலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இரங்கல் உரையும் வாசிக்கப்பட்டதோடு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் இரங்கல் உரை நிகழ்த்தினார்.

சமூக இடைவெளியை பேணும் வகையில் இருக்கைகள் போடப்பட்டிருந்ததுடன், பொதுமக்கள் எவரும் மைதானத்துக்குள் நுழைய அனுமதி வழங்கப்படவில்லை.

சர்வ மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மதகுருமார்கள், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அதிகாரத்திலுள்ள உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், மாவட்டத் தலைவர்கள் ஏனைய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும் மைதானத்துக்குள் நுழைய அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

பிரத்தியேக அனுமதி அட்டை விநியோகிக்கப்பட்டவர்கள் மட்டுமே மைதானத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

மேலும் ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தன. இதன்படி மைதானத்துக்குள் சுமார் 500 பேர் வரை மாத்திரமே அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

'சுகாதார பிரிவினரால் அனைவரும் உடல் வெப்பம் பரிசோதிக்கப்பட்டதுடன் கிருமி தொற்று நீக்கியால் கைகளை சுத்தப்படுத்திக் கொண்டே உட்செல்லும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (ம-3)

## முல்லையில்...

னாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதன்போது, முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்த 41 பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்த 3 பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் ஆகியோரே இவ்வாறு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த நான்கு நாட்களாக யாழில் நடத்தப்பட்ட கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகளில் ஏழு பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஏழு பேரும் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் மையத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-3,18)

## தாக்குதல் நடத்த...

வதறகு திட்டம் தீட்டியது தொடர்பாக, இராணுவத்திற்கு தகவல் கிடைக்கப் பெற்றது.

இதனையடுத்து, குறித்த பகுதிக்கு விரைந்த இராணுவத்தினர் அவ்விடத்தில் இருந்து 5 பெற்றோல் குண்டுகளையும் 2 இரும்புக் கம்பிகளையும் மீட்டு மல்லாகம் பொலிஸில் ஒப்படைத்தனர்.

அதேவேளை வன்முறைக் கும்பலைச் சேர்ந்த நால்வர் அவ்விடத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,104)

## தென்மராட்சியில்...

முத்துமாரியம்மன் ஆலயப் பகுதியில் நேற்று அதிகாலை ஊரடங்கு நடைமுறையில் இருந்தவேளை, வெள்ளை வானில் வந்த 7 பேர் கொண்ட குழுவினர் வாள்கள், கொட்டன்கள், இரும்புக் கம்பிகள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து இளம் பெண் ஒருவரைக் கடத்திச் செல்ல முயன்றுள்ளனர்.

அதற்கு வீட்டில் இருந்த பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்தபோது, அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதுடன் இளம் பெண்ணை வாள் முனையில் வெள்ளை வானில் ஏற்றி கடத்தி சென்றுள்ளனர்.

இது தொடர்பில் யுவதியின் தந்தை தெரிவிக்கையில்,

'தம்மை பொலிஸ் சிஐடி எனக்கூறியபடி குழு ஒன்று வீட்டுக்குள் புகுந்தது. பொலிஸாருக்கு முறையிட முயன்ற போது எனது கைபேசியை தட்டிவிட்டு என்னை தாக்கி கட்டிப்போட்டு மகளை கடத்தி சென்றனர்' என்றார்.

இவ்வாறு கடத்திச் செல்லப்பட்ட யுவதியை சில மணி நேரங்களில் யுவதியின் வீட்டில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் விடுவித்து குறித்த குழு தப்பிச் சென்றுள்ளது.

இதனையடுத்து யுவதியை மீட்ட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு இருவரைக் கைது செய்துள்ளனர்.

குறித்த பெண்ணை ஒரு வருடமாக காதலித்த ஒருவரே இந்த கடத்தல் சம்பவத்தை அரங்கேற்றியுள்ளார் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஊரடங்கை மீறி, வீட்டுக்குள் அத்துமீறியமை, யுவதியை கடத்தியமை தொடர்பில் இருவரைக் கைது செய்தோம் என்றும் கூறப்பட்டது.

இந்நிலையில், மேலதிக சந்தேக நபர்களைக் கைது செய்ய விசாரணைகள் தொடர்ந்து வருகிறது. யுவதியை இன்று சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் ஆஜர்ப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-3,114)

## முழுமையாக...

லணியின் பிரதானி பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வாரமும் சமூகத்திற்குள் கொரோனா நோயாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்றால் ஊரடங்குச் சட்டம் முழுமையாக நீக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரை தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டமும் ஞாயிற்றுக்கிழமைகளில் அமுல்படுத்தப்படும் ஊரடங்கு சட்டத்தையும் நீக்குவதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டு மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளதனால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

அதேவேளை ஜுன் மாதம் 4, 5ஆம் திகதிகளில் நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மணல் ஏற்றிச்...

தன். மணல் இல்லாமையினால் கட்டிட நிர்மாணப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக கட்டிட நிர்மாண ஒப்பந்தகாரர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.

அரசாங்கத்தின் ஆலோசனையின் பெயரில் இதற்கு அனுமதி வழங்க சுரங்கப் பணியகத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மணல் மண் ஏற்றிச் செல்வதற்கான நடைமுறைகள் குறித்தும் அனுமதி வழங்குவது தொடர்பாகவும் சுற்றறிக்கை ஒன்றினை சுரங்கப் பணியகத் திணைக்களம் நாட்டிலுள்ள அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது. (ம-3)

## தேர்தல் பிரசார...

பரிந்துரைக்குமாறு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

புத்திஜீவிகள் மற்றும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஆகியோரிடம் ஆணைக்குழு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

பரிந்துரைகளை மீளாய்வு செய்து பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. பிரசாரப் பணிகள் தொடர்பான பரிந்துரைகள் தொடர்ந்தும் கிடைப்பதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-3)

## 1633 ஆக...

வைரஸ் தொற்றிற்கு இலக்காகியுள்ளனர்.

வைரஸ் தொற்றிற்குள்ளான 801 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 822 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-3)

## தம்மைத் தாமே...

ஊடகங்களுக்கு அவரால் அனுப்பி வைக்கப்பட்ட வாரம் ஒரு கேள்விப் பதில் அறிக்கையிலேயே இந்த விடயங்களை அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

**கேள்வி:** தனிநாட்டு சிந்தனையில் இருந்து தமிழர்கள் விடுபட வேண்டும் என்றும் நாட்டு மக்களுக்கு பல திட்டங்கள் மூலம் வளர்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்றும் தமிழ் மக்களுக்கும் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் இடையில் இருக்கும் பிரச்சினைகள் வேறு வேறு என்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அண்மையில் இந்தியத் தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளாரே. அத்துடன் வடக்கு கிழக்கு பகுதிகளைத் தனிநாடாக்க வேண்டும் என்பது நடைமுறைச் சாத்தியமான கோரிக்கை அல்ல என்றும் கூறியுள்ளார். அவை பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** அவர் கூறியவற்றை ஒவ்வொன்றாக எடுத்து பதில் தருகின்றேன்.

i. தனிநாட்டுச் சிந்தனையில் இருந்து தமிழர்கள் விடுபட வேண்டும்.

அன்பார்ந்த பிரதமருக்கு பல விடயங்கள் தெரியவில்லை அல்லது மறந்துவிட்டார் போல் தெரிகின்றது.

இப்பொழுதும் வடக்கு கிழக்கு தனிப்பட்ட பிரதேசமே. அங்கு பெரும்பான்மையர் தமிழ் மொழி பேசுவோர். இவர்கள் வாழையடி வாழையாகத் தொடர்ந்து 3000 வருடங்களுக்கு மேலாக வடக்கு கிழக்குப் பிரதேசத்திலும் அவற்றைச் சார்ந்துமே வாழ்ந்து வருகின்றார்கள். அங்கு தற்போது வாழும் பெரும்பான்மையினர் பௌத்தர்கள் அல்ல. அவர்கள் இந்து மக்கள், இஸ்லாமியர்கள் மற்றும் கிறிஸ்தவர்களே. அவர்களின் இடங்கள் உலர்ந்த வலயத்திற்கு உட்பட்டன (Dry Zone). மற்றைய ஏழு மாகாணங்களும் ஈர வலயத்திற்கு உட்பட்டன (Wet Zone). வட-கிழக்கு மக்களுக்கென்று பிறிதான மொழி, கலை, கலாசாரம், பாரம்பரிய கைத்தொழில்கள் உள்ளன.

வடக்கு நோக்கிப் பயணிக்கும் ரயில்களில் மதவாச்சி தாண்டியவுடன் அதில் பயணிக்கும் தமிழ் மக்கள் காலை நீட்டி கையை நீட்டி சந்தோசமாகத் தமிழ் மொழியில் பேசி வருவதை அவர் அறியமாட்டார் என்று கூற முடியாது.

1958இலும் 1983இலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை கப்பல்களில் அனுப்பியது வட கிழக்கிற்கே. அது தமிழர் வாழ்விடங்கள் என்றபடியாலேதான் அவ்வாறு அனுப்பினார்கள். எமது வடக்கு கிழக்கு பேசு மொழி தமிழே சிங்களம் அல்ல. எந்தக் காலத்திலும் வடக்கு கிழக்கில் பெருவாரியாக சிங்களவர்கள் வாழ்ந்ததில்லை. தமிழர்கள் அநுராதபுரத்திலும் பொலநறுவையிலும் அண்மைக்காலம் வரை வாழ்ந்து வந்துள்ளார்கள். நான் சிறுவயதில் அநுராதபுரத்தில் இருந்த போது பல தொழில் ஸ்தாபனங்கள் தமிழர்களுக்குரியதாக இருந்தன. 17 வருடங்களாக ஒரு தமிழரே நகரசபை முதல்வராக இருந்தார். SWRD பண்டாரநாயக்க காலத்தில் பழைய நகரம் வேண்டுமென்றே கைவிடப்பட்டு புதியதொரு நகரம் அங்கு கட்டப்பட்டு தமிழர்கள் பழைய நகரத்தில் இருந்து விரட்டப்பட்டு சிங்களவர்கள் பெருவாரியாக அநுராதபுரத்தில் தற்போது வாழ்கின்றார்கள்.

இதை நான் கூறுவதன் காரணம் வடக்கு கிழக்கில் சிங்களவர்கள் எந்தக் காலத்திலும் பெருவாரியாக வாழவில்லை. மாறாகத் தமிழ் மக்கள் அண்மைக்காலம் வரையில் தற்போதைய சிங்களப் பிரதேசங்களில் வாழ்ந்து வந்துள்ளார்கள் என்பதை எடுத்துக் காட்டவே. எனினும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தற்போதும் பெரும்பான்மைத் தமிழ் மக்களே வாழ்ந்து வருகின்றனர். ஆகவே தற்போது தனி நாடாக இருக்கும் வடக்கு கிழக்கைத் தமது பிரத்தியேகப் பிரதேசம் என்று தமிழ்ப் பேசும் மக்கள் எண்ணுவதில் என்ன தவறு? உண்மையில் சிங்கள மக்கள் வடக்கு கிழக்கு சேர்ந்த இலங்கையைச் சிங்கள பௌத்த நாடாக கருதுவது தான் தவறு என்று நான் கூறுகின்றேன்.

இலங்கை பூராகவும் ஒரு பௌத்த நாடு. அது ஒரு தனிச் சிங்கள நாடு என்ற சிந்தனையில் இருந்து மாண்புமிகு மகிந்தர் விடுபடவேண்டும்.

**ii.நாட்டு மக்கள் கேட்டது பொருளாதாரத் திட்டங்களையே.**

2015 வரையில் அவரின் ஆட்சி இருந்ததே. அப்போது அவர் தமிழர்களுக்காக இயற்றிய செயற்றிட்டங்கள் என்ன? ஏற்படுத்திக் கொடுத்த வாய்ப்புக்கள் என்ன? ஏற்படுத்திய வளர்ச்சி என்ன? அன்று ஏற்படுத்தாத பொருளாதார வளர்ச்சியை இனித்தான் ஏற்படுத்திக் கொடுக்கப் போகின்றாரா? மனம் இருந்திருந்தால் 2009 போர் முடிந்தவுடன் தமிழ் மக்களுக்காக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கலாம். எமது சிறைக் கைதிகளை விடுவித்திருக்கலாம். அவ்வாறு செய்யாமல் அவர் 2020ல் இவ்வாறு கூறுவது நகைப்புக்கு இடமாக இருக்கின்றது.

வட மாகாண சபையானது செயலுருவாக்கப் பாடுபட்ட ஏற்றுமதிக்கான மரக்கறி, பழங்கள் பயிரிடும் வன்னிப் பிரதேச திட்டமானது எல்லாவிதமான அறிக்கைகள் பெறப்பட்டும் கொழும்பில் இருக்கும் காணி ஆணையாளர் நாயகத்தினால் மறுக்கப்பட்டது. நாம் வழங்கிய 200 ஏக்கர் காணியில் வனப் பிரதேசங்களும அடங்கியிருந்தன என்று பொய் கூறியே இவ்வாறான மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

நான் முதலமைச்சராக இருந்த காலத்தில் ஒரு வெளிநாட்டு ஸ்தானிகரிடம் மூன்று பொருளாதார திட்டங்களை முன்வைத்து அதற்கு உதவி புரிய முடியுமா என்று கேட்டேன். ஏன் முடியாது என்று கூறி எமது திட்ட வரைவுகளைத் தமது நாட்டின் தலைநகரத்திற்கு அனுப்பிவிட்டதாகக் கூறி தாமதித்து வந்தார். கடைசியில் அவர் பச்சைக் கொடி காட்டவல்லை. காரணமும் கூறப்படவில்லை. அவர் நாட்டுத் தலைநகரத்தில் தாமதம் என்று மட்டுமே கூறப்பட்டது. ஆனால் நான் ஸ்தானிகரின் கனிஷ்ட அலுவலர்களிடம் இருந்து அறிந்து கொண்டது இலங்கை அரசாங்கமே அவற்றை விரும்பவில்லை என்றே, என்று அக் கேள்வி பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## தேவை

கணக்குப் பதிவாளர், கணக்குப் பதிவு பயிலுனர்கள் தேவை. முழு நேர, பகுதிநேர வேலை செய்யலாம்.

வி.இல.2921

**C/O வலம்புரி**

இல. 3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-9624)

0768226240



## வெளிவந்து விட்டது

தரம் 1 முதல் தரம் 11 வரை

**செயலட்டை - 03**

தமிழ்மொழி மூலம் / ENGLISH MEDIUM

**யாழ் அக்கடமி வெளியீடு**

(C-9655)

வழமையான புத்தக சாலைகளில்

T.P : 077 538 8471



## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள யமகா நியூஸ்மேற் (ஜப்பான்) மோட்டார் சைக்கிள் (ஆங்கில இலக்கம்) விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 077 416 3146

மருதனார் மடம் வீதி, உரும்பிராய்.

(2928)



## கல்யாண மாலை

[சர்வதேச திருமண சேவை]

T.P: 021 720 1005



இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com

பதிவுக்கட்டணம் 1000/= + 300/= மட்டுமே


# முல்லைத்தீவில் மரக்குற்றிகள் மீட்பு

(கொடிகாமம்) முல்லைத்தீவு - மாந்தை கிழக்குப் பகுதியில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட பெருமளவு பாலை மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன.

சுமார் நான்கு லட்சம் ரூபாய் பெறுமதியான குறித்த பாலை மரத் தீராந்திகளை கைப்பற்றியுள்ளதுடன் அதனை ஏற்றிச்சென்ற உழவு இயந்திரத்தினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு ஒட்டன்குளம் பகுதியில் சட்டவிரோதமாக பாலைமரத் தீராந்திகள்வெட்டப்பட்டுவருகின்றமை தொடர்பில் வனவளத் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. இதனையடுத்து குறித்த சட்டவிரோத மரக் குற்றிகள் கைப்பற்றப்பட்டன. (ம-3,114)


## மீண்டும்

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.

(C-9614)

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்

தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே:- 021 222 3536


## துயர் பகிர்கின்றோம்



யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவனும், சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவருமான

அமரர்

**C.N.மதிவதனன்**

அவர்கள் 31.05.2020 அன்று காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-9654)

**யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி

**விஜயகுமாரி கேதீஸ்வரன்**

அவர்களின் அன்புக் கணவர்

**சின்னத்தம்பி கேதீஸ்வரன்**

(வங்கியாளர், வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்)

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி !

பாடசாலைச் சமூகம்

**யா/கலட்டி மெ.மி.த.க.பாடசாலை, யாழ்ப்பாணம்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 - 10 - 1950



மறைவு 13 - 06 - 2019

அமரர் **கிருஷ்ணர் தங்கராஜா**

வழித்துணையாய், எங்களை
நெறிப்படுத்தினீர்களே
ஒருமுறையேனும் உங்களைக் காண
மனம் தவிக்குதப்பா...!!

அன்பான எங்கள் அப்பாவே
பாசமாக எமை வளர்த்து
பண்பான பல கலைகள் கற்பித்து - இன்று
பல மைல்களுக்கப்பால் நாம் இருக்க
பறந்தோடி இங்கு வந்து
பார்த்திடுவீர்கள் என நினைத்தோம்
பாதியிலே எமைப் பரிதவிக்க விட்டுப்
போனது ஏனோ?

ஆண்டு ஒன்று கடந்தாலும் - எம்மால்
ஆற முடியவில்லை உங்கள் பிரிவை
ஆண்டவன் அடியினில் நீங்கள்
அமைதியாய் இருப்பீர்கள் என்று

எங்கள் அன்புத் தெய்வத்தின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- குடும்பத்தினர்

தொட்டிலடி, சங்கானை

(C-9653)

## மரண அறிவித்தல்

### சண்முகம் தங்கராசா



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் தங்கராசா அவர்கள் 25.05.2020 அன்று பிரான்சில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.06.2020) செவ்வாய்க்கிழமை இலங்கை நேரப்படி பிற்பகல் 2.30 மணியளவில் பிரான்சில் நல்லடக்கம் செய்யப்படும்.

இரங்கல் தெரிவிக்கும் நிகழ்வு குளங்கரை வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள அன்னாரின் சகோதரியின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குளங்கரை வீதி, கோண்டாவில்.

(2930)

தகவல் : குடும்பத்தினர்

077 613 3637 / 077 198 9281

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.06.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

# வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் வலம்புரியும் இணைந்து வழங்கும் கல்விச் சேவை
# தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சை

நேரம்: ஒரு மணித்தியாலம் 15 நிமிடம்

வினாப்பத்திரம் - 02

01)பின்வரும் பந்தியை வாசித்து வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்

காலிக்கோட்டையிலிருந்து ஹிக்கடுவை கடற்கரைக்குச் சென்றோம். இயற்கை எழில் கொஞ்சும் அக்கடற்கரை பரந்து காணப்பட்டது. கண்ணாடிப் படகுகள் மூலம் கடலுக்குச் சென்றோம். அங்கு பவளப்பாறைகள், வர்ண மீன்கள், வேறு கடல் வாழ் உயிரினங்கள் மற்றும் கடற் தாவரங்களையும் பார்வையிட்டோம். நாம் காண்பது கனவா அல்லது நனவா: கடலுக்குள் இவ்வளவு இரகசியம் உள்ளதா? என ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டோம். கடற்கரை மணலில் விளையாடினோம். சூரியன் கடலினுள் மறையும் அழகையும் கண்குளிரக் கண்டு இரசித்தோம்.

01.கண்ணாடிப் படகுகளில் கடலுக்குச் சென்று எவற்றை பார்வையிட்டதாகக் கூறப்படுகின்றது ?

.............................................................................................

02. பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக

1.ஆதவன் - ...........................................

2.அழகு - ...........................................

03. பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்துச் சொற்களை எழுதுக

1. கனவு - ...........................................

2. செயற்கை - ...........................................

04.பந்தியில் இடம்பெற்றுள்ள பண்மைப்பெயர்ச்சொல் எது ?

.............................................................................................

05.பந்தியில் இடம்பெற்றுள்ள வினைச்சொற்கள் உணர்த்தும் காலம் யாது ?

.............................................................................................

06.கண்குளிரக் கண்டு இரசித்த அழகு எது?

.............................................................................................

02. பின்வரும் சொற்களில் உயிர்க்குறிகளின் பெயர்களை எழுதுக.

1.நுளம்பு

.............................................................................................

2.சூரியன்

.............................................................................................

3.புத்தகம்

.............................................................................................

03. அடைப்புக்குள் உள்ள சொற்களிலே சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.

1.சிறுவர்கள் ....................................... (கடற்கறை/ கடற்கரை) மண்ணில் வீடு கட்டி விளையாடினர்.

2.நண்பர்கள் ....................................... (தேனீர்/தேநீர்) விருந்தில் கலந்து கொண்டனர்

3.எறும்புகள் ......................... (வளைக்குள்/ வலைக்குள்) உணவைச் சேகரித்து ல்வக்கின்றன.

04. கீழே தரப்பட்டுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை எழுதிப் பழமொழியைப் பூரணப்படுத்துக.

1. ............................................................................ காரம் பெரிது

2.காற்றுள்ள போதே............................................................................

05. கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச் சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. ஒரு தாய் வயிற்றில் பிறந்தோர் - ...........................................

6. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1.இளமையிற் கல்வி சிலையில் எழுத்து. இங்கு இளமை என்பதன் எதிர்க்கருத்துச் சொல் ...................................(முதுமை / பழைமை) ஆகும்.

2.ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா ......................... (வெள்ளி விழா/ பொன்விழா)

07.கீழே தரப்பட்டுள்ள பாடலின் வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.

மழைக்காலம் வழி வழுக்கும்<br>
............................................<br>
வழியருகே வெள்ளமுண்டு<br>
விலகிவர வேண்டும்

08. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குங்கள்

1. உள்ளளவும்/ நினை/ உப்பிட்டவரை

.............................................................................................

2. ஓடித்/ மீன்கள்/ திரிகின்றன/ சிறிய

.............................................................................................

09. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக்குள்இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. ஒளியைப் பரப்புவது.................................... (விளக்கு / விலக்கு )

2. நீடூழி காலம் ......................... (வாள்க/ வாழ்க) என வாழ்த்தினர்.

10. கீழே தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக.

crow............................................................

11. படத்தில் காட்டப்பட்டுள்ளதன் பெயரை ஆங்கிலத்தில் எழுதவும்

.........................................................



12.கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1.How much.......... (is / are) it?

2.Where................(is / are) they?

13.கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

Be careful ...............................................................

14.கீழே தரப்பட்டுள்ள சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

1.பொல கொஹேத? ...............................................................

15.பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.

1.கை கழுவுங்கள் ...............................................................

16.அடைப்பினுள் உள்ள இலக்கங்கள் நான்கையும் பயன்படுத்தி ஆக்கக் கூடிய மிகச்சிறிய எண் யாது?

| | |
|---|---|
| 3 | 6 |
| 0 | 7 |


...............................................................

17.தரப்பட்டுள்ள எண்ணிற்கு முன்னாலும்.பின்னாலும் இடம்பெற வேண்டிய எண்களை எழுதுக?

...................... 5099, ......................

18.கீழுள்ள உருவில் காணப்படும் சதுரங்களின் எண்ணிக்கை யாது?

...............................................................





19. 1. கீழுள்ள உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியைப் பின்னத்தில் குறிப்பிடுக.

...............................................................

2. நிழற்றப்படாத பகுதியையும் பின்னத்தில் தருக?

...............................................................



20. 

அருகிலுள்ள உருவில் எத்தனை சமச்சீர் கோடுகளை வரையமுடியும்

...............................................

21.சகானியின் வயது 10 ஆகும். அவளுடைய தாயின் வய்து சகானியின் வயதின்மூன்று மடங்கிலும் மூன்று கூடியதாகும் எனின் தாயின்வயது யாது?

...............................................................

22.கீழுள்ள எண் கோலத்தில் அடுத்து வரவேண்டிய எண்ணை எழுதுக.

1, 2 , 4 , 7 , ...........................

23.கீழுள்ள அட்டவணையைப் பூரணப்படுத்துக?

| அளவு | 500g பைக்கற்றுக்களின் எண்ணிக்கை | 250g பைக்கற்றுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 3kg மாவு | ............................ | ............................ |

24. 


கீழுள்ள கடிகார முகத்தில் காட்டப்படுள்ள நேரத்தை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.


1.கடிகார முகம் காட்டும் நேரத்திற்கு 1 மணித்தியாலத்திற்கு முன்னுள்ள நேரம் யாது?

...............................................................

2.கடிகார முகம் காட்டும் நேரத்திற்கு 1 மணித்தியாலத்திற்குப் பின்னுள்ள நேரம் யாது?

...............................................................

25. கீழே உருவை அவதானித்து பென்சிலின் நீளத்தை எழுதுக.




..................................................................................................


26.கீழுள்ள அடைப்பினுள் உள்ள A,B எனும் இடங்களுக்குப் பொருத்தமான எண்களை உரிய புள்ளிக் கோட்டில் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| X | 4 | 5 | 6 |
| 2 | 8 | 10 | A |
| 3 | 12 | B | 18 |

A ..................................

B ..................................

27. கீழுள்ள வரைபடத்தை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக?



**1. வீட்டிற்கு வடக்கில் இருப்பது யாது?**


..............................................................

**2. கிணற்றிற்கு கிழக்குத் திசையில் மிக நெருக்கமாக அமைந்திருப்பது யாது?**

..............................................................

28. 3l தேங்காய் எண்ணெய் 100ml கொள்ளவுடைய எத்தனை போத்தல்களை நிரப்ப முடியும்? ..............................................................

29. கீழே தரம் 4 மாணவர்கள் விரும்புகின்ற இனிப்புப் பண்டங்களை நிரல்வரைபு காட்டுகிறது. அதனை அவதானித்துக் கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக?



1. தொதளை விட கொக்கீசை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

..............................................................

2. மஸ்கட்டையும் எள்ளுருண்டையையும் விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

..............................................................

3. தரம் 4 வகுப்பு மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..............................................................

● 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

30. பங்குனி மாதத்தில் பூக்கும் தாவரம் எது?
1. முருங்கை 2. பாலை 3. நாவல்

31. டெங்கு நோயைப் பரப்பும் பிராணி.
1.எலி 2. நுளம்பு 3. தேனீ

32. மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடுகளின் எண்ணிக்கை?
1.ஐந்து 2. நான்கு 3. மூன்று

33.நாம் எவ்வகை உணவை உண்ணுவதில் இருந்து தவிர்க்க வேண்டும்?
1.தானியங்கள் 2. மரக்கறிகள் 3. பொரித்த உணவுகள்

34. பின்வருவனவற்றில் வருடம் முழுவதும் பூக்கும் தாவரம் எது?
1.மரமுந்திரி 2. மா 3. மிளகாய்ச் செடி

35.மருந்தாகப் பயன்படுத்தப்படும் தாவர வேர்?
1.அறுகம்வேர் 2. வெட்டிவேர் 3. மரவள்ளிவேர்

36. மண்ணினுள் புதைத்து வைத்து சில நாட்களுக்கு பேணப்படும் வித்து
1. பலாக்கொட்டை 2. எலுமிச்சை 3. கௌப்பி

37. இலங்கையின் தேசிய அடையாளங்களில் ஒன்று?
1.கரப்பந்தாட்டம் 2. நெல்லரிசிச்சோறு 3. கிரிக்கெட்

38.தாவரத்தில் கூடு கட்டி முட்டையிடும் பறவைகளை மட்டும் கொண்ட சோடி பின்வருவனவற்றுள் எது?
1.கிளி- காகம் 2. கொக்கு-காகம் 3. குயில்- காகம்

39.களப்பயணங்களின் போது சிறிய பூச்சியினங்களை அவதானிக்க எமக்கு உதவுவது?
1.கைவில்லை 2. அரியம் 3. எண்சட்டம்

40.இலங்கை நாட்டின் தலைவர்?
1.பிரதமர் 2. ஜனாதிபதி 3. சபாநாயகர்

41. பின்வருவனவற்றுள் தனிப் பாவனைக்குரிய பொருள்
1.கணினி 2. கைக்குட்டை 3. தொலைபேசி

42. காதுகள் மற்றும் கண்கள் மூலம் தகவல்களை பெறக்கூடிய ஊடகம்?
1. வானொலி 2. கடிதம் 3. தொலைக்காட்சி

43. தேசியக் கொடியில் இல்லாத நிறம்
1.சிவப்பு 2. மஞ்சள் 3. நீலம்

44. கஸ்பர் வீல் உள்ள உபகரணம்
1. துவிச்சக்கரவண்டி 2. வீல்பரோ 3. குளிர்சாதனப்பெட்டி

45.மண்புழுக்கள் அழிவடைவதற்குக் காரணமான மனித செயற்பாடு எது?
1.மண்ணைக் கொத்திப் புரட்டல்.
2.இயற்கைப் பசளையை மண்ணில் அதிகமாக இடுதல்.
3.மண்ணிற்கு இரசாயனப் பசளையை இடுதல்.

46.பொதி செய்யப்பட்ட பொருட்களில் உற்பத்தித் திகதிக்கும் காலாவதித் திகதிக்கும் இடையில் குறுகிய நாட்களைக் கொண்ட பொருள்?
1.மாஜரீன் 2. சோயாமீற் 3. யோக்கட்

47.நாற்றுச்சாடி தயாரிக்க பயன்படுத்தப்படாத பொருள்
1.தேங்காய் உரிமட்டை 2. கடதாசி 3.மூங்கில் குழாய்

48.நாம் நடக்கும் போது முதலில் நிலம் பட வேண்டிய பகுதி
1.குதிக்கால் 2. நுனிக்கால் 3. கால் விரல்கள்

49. நாம் சூடான உணவுகளை பின்வரும் எப்பாத்திரத்தில் இடக்கூடாது?
1.மாபிள் கோப்பைகளில் இடுதல்.
2.கண்ணாடிக் கோப்பைகளில் இடுதல்.
3.பிளாஸ்ரிக் கோப்பைகளில் இடுதல்.

50.இலங்கைக்கு வடக்குத் திசையில் உள்ள நாடு?
1.அவுஸ்திரேலியா 2. ஆபிரிக்கா 3. இந்தியா

51.அரசு இலச்சினையில் சந்திரன், சூரியன் மூலம் உணர்த்தப்படும் கருத்து யாது?
1.சௌபாக்கியம் 2.நிலைத்திருத்தல் 3. தன்னிறைவு

52.வடமாகாணத்தில் பெருக்குமரம் காணப்படும் மாவட்டம் எது?
1.மன்னார் 2. கண்டி 3. யாழ்ப்பாணம்

53.பின்வருவனவற்றில் நீரில் கரையாத பொருள்.
1.மெழுகு 2. உப்பு 3. கொண்டிஸ்பளிங்கு

54.பின்வரும் எச் சந்தர்ப்பத்தில் நீர் விரைவில் ஆவியாகும்?
1.மழை பொழியும் சந்தர்ப்பத்தில்.
2.காற்றுடன் கூடிய வெயில் வேளையில்.
3.பனி வேளையில்.

55.மத்திய மாகாணத்திற்குரிய மாவட்டம் எது?
1.கண்டி 2. அம்பாறை 3.அநுராதபுரம்

56.பயிர் நிலங்களுக்குப் பசளையிடுவதன் காரணம் யாது?
1.மண்ணை வளப்படுத்த.
2.மண்ணரிப்பைத் தடுக்க.
3.மண்ணின் ஈரப்பதத்தினைப் பேண.

57.உணவைச் சுவையூட்டப் பயன்படுத்தப்படும் பொருள் அல்லாதது?
1.கறிவேப்பிலை 2. கறுவாப்பட்டை 3. வேப்பம்பட்டை

58.பொய்க்காலில் நடத்தல் விளையாட்டு உபகரணம் தயாரிக்கத் தேவையான பொருள் தொகுதி
1.இரும்பாணி, பலகை, பலகைச்சக்கரம்
2.நூல், பலூன்,தடித்துண்டு
3.இரு சிரட்டைகள், கயிறு

59.பின்வரும் தொழில்களில் சூரிய ஒளி அவசியமான தொழில் எது?
1.செங்கல் அரிதல் 2. மீன்பிடி 3. தச்சுவேலை

60. கீழேயுள்ள படத்தைப் பார்த்து 03 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கிய த்திலும் குறைந்தது ஐந்து சொற்களாவது இடம் பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இடம் பெறுதல் வேண்டும்.



1) ..............................................................

2) ..............................................................

3)..............................................................

## தரம்-5 புலமைப்பரிசில் வினாப்பத்திரத்திற்கான விடைகள் பகுதி -01

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 3 | 11) | 1 | 21) | 2 | 31) | 2 |
| 2) | 1 | 12) | 3 | 22) | 2 | 32) | 1 |
| 3) | 2 | 13) | 2 | 23) | 2 | 33) | 1 |
| 4) | 2 | 14) | 2 | 24) | 2 | 34) | 3 |
| 5) | 2 | 15) | 2 | 25) | 3 | 35) | 1 |
| 6) | 1 | 16) | 3 | 26) | 1 | 36) | 1 |
| 7) | 2 | 17) | 1 | 27) | 3 | 37) | 3 |
| 8) | 3 | 18) | 3 | 28) | 3 | 38) | 2 |
| 9) | 2 | 19) | 3 | 29) | 3 | 39) | 1 |
| 10) | 2 | 20) | 3 | 30) | 2 | 40) | 3 |

# வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் வலம்புரியும் இணைந்து வழங்கும் கல்விச் சேவை

# க.பொ.த. சாதாரண தரம்- சைவநெறி

நேரம்: ஒரு மணித்தியாலம் வினாப்பத்திரம் - 01

பகுதி I

எல்லா வினாக்களுக்கும் விடைதருக

1. உலகப் பொருள்கள் யாவற்றிலும் மேலானது
   1. பரம்பொருள்
   2. கடவுள்
   3. பதி
   4. இறைவன்

2. 'அரிது அரிது மானிடராதல் அரிது' எனக் கூறியவர்
   1. திருவள்ளுவர்
   2. திருமூலர்
   3. சுவாமி விவேகானந்தர்
   4. ஔவையார்

3. சிவனின் அருவுருவத் திருமேனி
   1. நடராஜர் 2. தட்சணா மூர்த்தி
   3. சிவலிங்கம் 4. அர்த்தநாரீஸ்வரர்

4. மூலமலம் எனப்படுவது
   1. கன்மம் 2. மாயை
   3. ஆணவம் 4. மேற்கூறிய யாவும்

5. திருவருட்பயன் ஆசிரியர்
   1. திருவள்ளுவர் 2. உமாபதி சிவாச்சாரியார்
   3. திருமூலர் 4. மனவாசகங்கடந்தார்

6. நிகரில் இறை என்பது
   1. எங்கள் தலைவன் 2. பெருங்கருணையாளன்
   3. ஞானசொரூபி 4. ஒப்பில்லாத இறைவன்

7. தென்னவன் பிரமராயன் என சிறப்புப் பட்டத்தைப் பெற்றவர்
   1. மாணிக்கவாசகர்
   2. சுந்தரமூர்த்திநாயனார்
   3. திருஞானசம்பந்தர்
   4. திருநாவுக்கரசர்

8. குங்குலியக்கலயநாயனார் குங்குலியதீபம் ஏற்றியதலம்
   1. திருப்புன்கூர்
   2. திருவீரட்டானம்
   3. திருவீழிமிழலை
   4. திருப்பாதிருப்புலியூர்

9. 'அதலசேடனார் ஆட அகிலமேருமீதாட'... என்ற திருப்புகழைப்பாட முருகப் பெருமான் காட்சிகொடுத்த தலம்
   1. திருப்பரங்குன்றம்
   2. திருச்செந்தூர்
   3. பழமுதிர்ச்சோலை
   4. திருவண்ணாமலை

10. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் நாவன்மையைப் பாராட்டிநாவலருக்கு 'நாவலர்' என்ற பட்டத்தை வழங்கிய நிறுவனம்

1. திருப்பனந்தாள் ஆதீனம்
   2. தருமபுரஆதீனம்
   3. திருவாவடுதுறை ஆதீனம்
   4. மதுரைஆதீனம்

11. இந்துசமயத்தின் முதன் நூல்
   1. வேதம் 2. ஆகமம்
   3. புராணம் 4. இதிகாசம்

12. கடவுள் ஒருவரே என்பதனைக் கூறும் இருக்கு வேத வாக்கியம்
   1. சத்யம்வத
   2. தர்மம்சர
   3. ஏகம்ஸத் விப்ராபகுதாவதந்தி
   4. ஆச்சாரியதேவோபவ

13. ஊரெல்லாம் ஒன்றெனக் கருதி ஒருவருக்கொருவர் உதவிசெய்வது
   1. பணிவு
   2. கடமை
   3. மேன்மை
   4. ஒப்புரவு

14. பிரபோத சைதன்யர் என்ற பிரமச்சாரிய நாமம் கொண்டவர்
   1. சுவாமி விவேகானந்தர்
   2. சுவாமி விபுலானந்தர்
   3. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
   4. அருணாசலதேசிகர்

15. மறைஞான சம்பந்தரின் 'சித்தாந்த ஞானபோதம்' என்ற பிரமாண நூலின் மறுபெயர்
   1. கொடிக்கவி
   2. சிவஞானபோதம்
   3. சதமணிக்கோவை
   4. திருவருட்பயன்

16. 'சத்யம் வத' என்னும் உபநிடத மகாவாக்கியம் குறித்து நிற்பது
   1. பொறுமை 2. ஈகை
   3. வாய்மை 4. அன்புடைமை

17. சைவசித்தாந்தம் குறிப்பிடும் மூவகை ஆன்மாக்கள்
   1. பதி, பசு, பாசம்
   2. ஆணவம், கன்மம், மாயை
   3. சகலர், பிரயாகலர், விஞ்ஞானகலர்
   4. மனம், வாக்கு, காயம்

18. 'பட்ட கட்டையில் பகற்குருடு போகின்றது' என்று யாரைப் பார்த்துக் கூறப்பட்டது
   1. உமாபதி சிவாச்சாரியர் 2. மறைஞானசம்பந்தர்
   3. மெய்கண்டதேவர் 4. அருணந்தி சிவாச்சாரியார்

19. ஆவணி மாத பௌர்ணமிக்கு முந்திய வெள்ளிக்கிழமையன்று அனுட்டிக்கும் விரதம்
   1. கேதாரகௌரி விரதம் 2. கந்தசஷ்டி விரதம்
   3. பிள்ளையார் கதை 4. வரலட்சுமி விரதம்

20. சுக்கிலபட்சம் வேறு எப்பெயரால் அழைக்கப்படும்
   1. தேய்பிறை 2. வளர்பிறை
   3. சூரியமானம் 4. சந்திரமானம்

21. ஐந்தாம் குரவர் என அழைக்கப்படுபவர்
   1. திருஞானசம்பந்தர் 2. திருநாவுக்கரசர்
   3. சுந்தரமூர்த்திநாயனார் 4. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

22. 'சைவசமய களஞ்சியம்' என்ற நூலினை தொகுத்து வழங்கியவர்
   1. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
   2. சுவாமி விவேகானந்தர்
   3. அருணாசலதேசிகர்
   4. சுவாமி விபுலானந்தர்

23. சைவமரபிலே சிவனடியார்களால் அருளப்பட்ட தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்கள்
   1. திருமுறை 2. தோத்திரப்பாடல்
   3. பதிகங்கள் 4. தேவாரம்

24. தேவாசிரியன் மண்டபம் எங்கே அமைந்துள்ளது
   1. திருவாமூரில் 2. திருநாவலூரில்
   3. திருவாரூரில் 4. திருவாதவூரில்

25. நம்பியாண்டார் நம்பி அருளிய நூல்
   1. திருத்தொண்டர் தொகை
   2. திருத்தொண்டர் திருவந்தாதி
   3. கோயில்நான்மணிமாலை
   4. திருமுருகாற்றுப்படை

26. சிவபெருமானிடத்தில் படிக்காசு பெற்றவர்கள்
1. சுந்தரர், மாணிக்கவாசகர்
2. காரைக்காலம்மையார், இசைஞானியார்
3. சம்பந்தர், அப்பர்
4. பூசலார், திருமூலர்

27. மாணிக்கவாசகர் முத்தியடைந்ததினம்
1. ஆனிமகம் 2. சித்திரைச்சதயம்
3. ஆடிச்சுவாதி 4. வைகாசிமூலம்

28. கடல் நீரில் விளக்கேற்றி வழிபாடு நிகழ்த்தப்படும் ஆலயம்
1. காரைதீவு கண்ணகி அம்மன் ஆலயம்
2. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்
3. நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம்
4. சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயம்

29. சைவபரிபாலன சபை எத்தனையாம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது
1. 1880 2. 1788 3. 1886 4. 1888

30. யுத்தகளத்தில் தன் ஆசிரியர்களையும் உறவினர்களையும் கண்டுமனங் கலங்கிய அர்ச்சுனனுக்கு கிருஸ்ண பரமாத்மாவால் உபதேசிக்கப்பட்ட உபதேசம்
1. திரிபீடகம் 2. தம்மபதம்
3. பகவத்கீதை 4. பிரமசூத்திரம்

31. 'ஓமப்புகை எம் மீது படுவதால் உடலில் உண்டாகும் நோய்கள் நீங்கும்' என்னும் நம்பிக்கையுடன் நடாத்தப்படும் ஆலயக்கிரியை
1. காமியகிரியை 2. நித்தியக்கிரியை
3. கும்பாபிஷேகக் கிரியை 4. ஆன்மார்த்தக்கிரியை

32. சுந்தரர் வலக் கண்பார்வை பெற்ற தலம்
1. திருவெண்பாக்கம்
2. திருவாரூர்
3. திருவொற்றியூர்
4. திருகச்சியேகம்

33. விழுமியம் என்பது எதனைக் குறிக்கும்
1. ஒழுக்கமுடைமையும் அன்புடைமையும்
2. கடமை,வாய்மை, தூய்மை
3. ஒழுக்க வாழ்வின் மூலம் பின்பற்றப்படுகின்ற அனைத்து நடத்தையும்
4. ஒழுக்கமுடைமையும் செய்நன்றிமறவாமையும்

34. மனிதன் தெய்வமாவதற்கு மிகவும் வேண்டியதாகக் கூறப்படுவன
1. கல்வியும் அறிவும்
2. ஈகையும் இரக்கமும்
3. நேர்மையும் கடமையுணர்வும்
4. புகழும் பெருமையும்

35.சித்திரபுத்திரனார் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ள படிபூலோகத்தில் செய்யப்படும் பாவத்தையும் அதற்குரிய தண்டனையையும் சரியாகக் கொண்டசோடி
1. பெற்றோரை வருத்துதல் - ஆணிப்பலகையில் படுக்கவைத்துவாளால் அரிதல்
2. மதுஅருந்துதல் புகைத்தலில் ஈடுபடுதல்- கழுமரத்தில் ஏற்றிக் கொல்லுதல்
3. பிறர் சொத்தைக் களவாடுதல்- தீக்கிடங்கில் தள்ளிவிடுதல்
4. உயிரினங்களைவதைத்தல் - கொடிய நச்சுப்பாம்புகளைக் கொண்டு தீண்டச் செய்தல்

36. திருப்பனந்தாளில் சாய்ந்திருந்த சிவலிங்கத்தை தனது கழுத்தில் வலிமையான கயிற்றைக் கட்டியிழுத்து நிமிர்த்தி அற்புதம் செய்தவர்
1. கண்ணப்பநாயனார்
2. குங்குலியக்கலயநாயனார்
3. அப்பூதியடிகள்
4. நமிநந்தியடிகள்

37. ஆகமங்களில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களை மாத்திரம் கொண்ட தொகுதி
1. ஆலயம் அமைப்பதற்கான இடம், அமைப்புமுறைகள்,கோயிற்கிரியைகள்
2. பமம இலக்கணம், கப்புகனார் ஒழுக்கமுறைகள், கோயிற் கிரியைகள்
3. கப்புகனார் ஒழுக்கமுறைகள், படிமங்களைவார்க்கும் முறைகள்
4. அர்ச்சகர் ஒழுக்கம், உருத்திரன், இந்திரன், வருணனை முறைகள், ஆன்மாக்கள் அடையும் பேறு

38. தேர்த்திருவிழா இறைவனின் எத்தொழிலைக் குறிக்கின்றது
1. படைத்தல் 2. அருளல் 3. காத்தல் 4. அழித்தல்

39. 'தமிழாகமம்' என்று சிறப்பிக்கப்படும் நூல்
1. தேவாரம் 2. திருமுறை 3. திருமந்திரம் 4. பெரியபுராணம்

40. பிரமபுரம் என அழைக்கப்படும் தலம்
1. திருப்புன்கூர் 2. திருவாரூர்
3. சீர்காழி 4. திருக்கழுமலம்

## க.பொ.த சாதாரணதரம் சித்திரப் பாடம் விடைகள் பகுதி -01

(1) 1.வாசிக்கின்ற பிள்ளை
2.கே. கனகசபாபதி
3.மரபு ரீதியான இயல்பும்,கனவடிவ வாதப் பண்பும்
4.பச்சை நிறபேதங்களும், ஆழத்தைக் காட்ட கபிலம் நிறம் பயன்படுத்தப் பட்டுள்ளது.
5.கோடுகளால் பதைளங்கள் பிரிக்கப்பட்டுள்ளது. தடிப்பான ஆழமான கோடு களும் நிறங்களும் சிறப்பாக கையாண்டுள்ளார். ஆழமும் முப்பரிமாணமத் தன்மையுடன் கருப்பொருளை உணர்வு பூர்வமாக காட்டியுள்ளார்.

(2) 1.சேவற்சண்டை 2. எண்ணெய்/தைல
3. முப்பரிமாண 4.துரித/வேகமான

(1) 1.சகுந்தலை
2. ஏ.மார்க்கு
3.கனவடிவவாதப் பாணியின் இயல்புகள்
4.பஸ்ரல் ஊடகத்தில் தடித்தகோடுகளின் வேறுபாட்டால் முப்பரிமாண இயல்பு காட்டப்பட்டுள்ளது.
5.ஒட்டுமொத்தநிறம், தளவுருவங்கள், கோடுகள் சகுந்தலையின் உள்ளார்ந்த உணர்வு வெளிப்பாடுகளை காட்டிகலைஞர் ஒழுங்கமைத்துள்ளார்.

(2) 1. மனிதனும் நாய்களும் 2. மனித
3. ஹென்றிமூரின் உட்குழிந்த 4. பிளாஸ்ரிக் குழாயினை
5. உட்குழிந்த வெளித்தள்ளிய

1. பொலநறுவைக்காலம், 1ஆம் பராக்கிரமபாகு
2. உத்தராராமய
3. மகாயானபௌத்தம்
4.பல்வைமரபு
5. பாதிதிறந்தகண்கள், நீண்டகாதுகள், சுருள் தலைமுடி கொண்டஉச்சிக் குடும்பி ஒருபக்கத்தை மறைக்கும் உடலோடு ஒட்டிய சமாந்தர ரேகைகளை உடைய காவியுடையுடன் வீரக்குணங்களையும் கொண்டுள்ளது.

7.வீராசனம் 8.தியானமுத்திரை 9.மகரதோரணம்

10.தியானமுத்திரை 11.வஜ்ஜ்ர குறியீடு
12.தோரணவேலைப்பாடும்,குடைவடிவமும் காணப்படுகின்றது.
13.இருசிங்கஉருவங்கள்
14.பிரம்மாவும் விஸ்ணுவும்,சாமரம் ஏந்திய வித்தியாதரர்களும்
உறங்குநிலைப் புத்தர் சிலை

15.46 அடி
16.தலைவைத்துள்ள தலையணைப்பகுதி பதிந்துள்ள விதம் நுணுக்கமாக காட்டப்பட்டிருத்தல் அற்புதமானது.

22.பாவதுக்கதுன்கிந்த (சோக)
23:22 அடி
24.இச் சிலை துக்கத் தன்மைகளை காட்டுகின்றது.

1. பராக்கிரமபாகுசிலை
2. பொற்கொல் விகாரைக்குஅண்மையில்
3. திரிபங்கநிலை
4. கபில ரிஷி, புலஸ்திமுனி, பொலநறுவையில் வாழ்ந்த குருளுகோமி
5. அரசைக் குறிக்கின்றது.(நுகத்தடி)

1. கி.பி 12 ஆம் நூற்றாண்டு 2. நிஸங்கமல்லமன்னனால்
3. நீர்க்குமிழி 4. தாமரைத் தண்டுவடிவங்கள்
5. நிஸ்ஸங்கமல்ல அரசன் தர்மபோதனையைசெவிமடுக்கவும், புனிதநந்தத்தை வழிபடவும், பிரித் செவிமடுக்கவும்.

1. ஹென்றி மூர்.
2. கட்புலயதார்த்த நிலையிலிருந்து வேறுபட்ட கருத்து நிலையான உருவங்களைக் கொண்டு சிற்பக்கலையில் அறிமுகம் செய்தார்.
3. பாரிய உடலைக் கொண்ட மனித உருவங்களில் சிறியதாக தலைகாணப்படும்
4. அரச குடும்பம், சாய்ந்துபடுத்திருக்கும் பெண்
5. மரம், உருக்கு, சீமெந்து
6. குடும்பம் , சாய்நிலைப்பெண்

1. நடராஜர் சிலை 2.முதலாம் சிவாலயத்தில்
3. கொழும்பு நூதனசாலையில் 4. வெண்கலம்
5. ஐந்தொழில் தத்துவத்தை/பிரபஞ்சத்தின் தோற்றம்

1. 5ஆம் சிவாலயத்தில் 2. பொலநறுவை நூதனசாலையில்
3. வெண்கலம்
4. வலது கை கடகஹஸ்தமுத்திரை, இடது கை டோல ஹஸ்த முத்திரை
5. திரிபங்கநிலை

1. 5ஆம் சிவாலயத்தில் 2. அநுராதபுர நூதனசாலையில் 3. வெண்கலம்

1. சுந்தர மூர்த்திநாயனார் 2. 5ஆம் சிவாலயத்தில்
3. கொழும்பு நூதனசாலையில் 4. வெண்கலம்
5. வலது கை கடகஹஸ்த முத்திரை